அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page. No - 52.

மலர் 4 இதழ் 2 விலை அ.4	நந்தன ஸ்ரீ வைகாசி மீ மே—ஜூன்—1952	வருட சந்தா ரு. 2-4-0

ACC. NO. 18581.



சிவபெருமான் நக்கனுக்கு வரமளித்தல்

(காந்தபுராணச் சித்திர விளக்கம்—36)

பொருளடக்கம்

			பக்கம்
1. குருநாதன்	(திருப்புகழ்மணி)	...	49
2. கதிர்காம யாத்திரை	(கி. வா. ஜகந்நாதன்)	...	54
3. ஆத்ம போதம்	(கா. பிச்சுமணி, கி. சுப்ரமணியன்)	...	59
4. வீரபாண்டியர்	(ரசபதி)	...	63
5. தியாகம்	(K, S. சுந்தரமூர்த்தி)	...	75
6. மனசாட்சி	(V. G. R.)	...	80
7. சேக்கிழார் செய்தது	(இளவழகனார்)	...	85
8. ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்	(V. S. வேங்கடராமன்)	...	90
9. Cosmos and Trees	(Thiruppugal Mani)	...	95

கர ஆண்டு பன்னிரண்டு இதழ்களும் பயிண்டு செய்யப் பட்டது ரூ. 3—6—0. தபால் செலவு அணா 6. வேண்டு வோர்கள் ரூ. 3—12—0 அனுப்பவும் வி. பி. இல்லை.

'அமிர்தவசனி'யின் முன்னேற்றத்தைக் கருதி ரூ. 50—0—0 நன் கொடையாக உதவும் அன்பார்ந்த நேயர்களுக்கு ஆயுள்வரை பத்திரிகை அனுப்பப்பெறும்.

அமிர்தவசனி சந்தா அறிக்கை

சித்திரை முதல் பங்குனி முடிய வருட சந்தா ரூ. 2—4—0
நான்கு வருட சந்தா ரூ. 8—4—0
முன்னதாகச் சந்தா அனுப்புகிறவர்களுக்குமட்டும் பத்திரிகை அனுப்பப்படும்
அயல் நாடுகளுக்கு வருடசந்தா ரூ. 3—0—0.
4 வருட சந்தா ரூ. 11—0—0.
முன்னதாக அனுப்பவும். வி.பி. இல்லை.
அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

ஸ்ரீ அருணகிரிநாதர் 'திருப்புகழ் மாலை'	(160 பாடல்)	0—8—0
பாராயணத் தோத்திரத் திரட்டு		0—1—6
கம்பர் தமிழ் அகராதி	(940பக்கம்)	7—12—0
	செலவுடன்	8—9—0
கந்தர் அனுபூதி	(ரசபதி அவர்கள் உரையுடன்)	1—0—0

கிடைக்குமிடம்: அமிர்தவசனி காரியாலயம், 54, பந்தர் தெரு, சென்னை-1

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 4	நந்தன ௵ வைகாசி ௴ மே—ஜுன்—1952	இதழ் 2

குருநாதன் 1.

(திருப்புகழ் மணி)

குரு ப்ரம்ம குருர் விஷ்ணு :
குருர்தேவோ மஹேஸ்வர :
குருஸ்ஸாக்ஷாத் பரம்ப்ரம்ம :
தஸ்மைஸ்ரீ குரவேநம :

ப்ரம்மாவென்றும் விஷ்ணுவென்றும் சிவனென்றும் பரமென்றும் சொல்லப்படுவது எல்லாம் குருமயமே. உலகுக்கு எல்லாம் குருவாய் அமைந்தது ஒன்றுதான். குருமயம் ஜகத். காண்பவன் சிஷ்யன். சாக்ஷியாய் உணர்த்துவது குருநாதன். கண்ணினுட் சாக்ஷியாகி நின்றான் ஆண்டவன் என்றார் ஸ்ரீ அப்பர். கண்டன வெல்லாம் மோன வுருவெளியதாகவும் கருதுவோம்; கருதி அஞ்சலி செய்வோம் என்றார் தாயுமானவர்.

காணித்துடலை நமன் கட்டியே கைப் பிடித்தால்
காணிப்பொன் கூடவரக் காண்கிலமே நெஞ்சமே.

தீபம் ஏற்ற்ருத விளக்கு சீடன். தீபத்தின் வெளிச்சம் குரு; அது ஞான ஒளி. ஏற்றப்பட்ட விளக்கு குருவும் சீடனும் கலந்த இடம். இதுதான் அவர்கள் கூடிய க்ஷேத்திரம். இந்த கூடலெனும் க்ஷேத்திர வாசியைத் தெய்வம் என்பர்; முருகன் என்பர்; தீபமங்கள ஜோதியென்று வர்ணிக்கின்றார் ஸ்ரீ அருணகிரியார் முருகனை. எண்ணிறந்த ஜீவராசிகளுக்கு, எண்ணிறந்த ரூபகாக்ஷியளித்து, காட்டிய ரூபங்களை தனது அரங்கமாகக் கொண்டு, "உருவரங்கமாகி நின்ற" வுண்மையாய் "ஒன்றாய்" வளர்வதும், அருள் நிறைவாய் எங்கும் நிறைந்து இலகுவதும் எமது குருதான். குருவைக் காணவேண்டில் விளக்களிக்கின்றார் தாயுமானவர்.

மைவிடாது எழுநீல கண்ட குருவே ! விஷ்ணு
வடிவான ஞான குருவே !
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே !
மதங்கள் தொறும் நின்ற குருவே !
கைவிடாதே என்ற அன்பருக் கன்பாய்
கருத்துணர்த்து குருவே !
கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடும்
கருணா கரக் கடவுளே !

திருமூர்த்திகளிடத்தில் குருவைக் காணலாம். கண்ணிருந்தால் குருவை எங்கேதான் காண முடியாது? சிவ விநோதமாய் நின்ற குருவைப் பார். சிவம் என்பது ஓர் கொழுந்து. சிவக்கொழுந்து என்பார்கள் மேலோர்கள். அது, எரியும் விளக்கில் சிகையாய் விளங்குவது. எரி, அதாவது அக்னி சிவத்தின்

வஞ்சகத்தை நீக்கி மறுநினைவு வாராமல்
செஞ்சரணத் தாளைச் சிந்தை செய்வாய் நெஞ்சமே.

உருவம். "எரியலால் உருவமில்லை" என்பது அப்பர் வாக்கு. பஞ்ச பூதங்களில் அக்கினியைச் சார்ந்தது ஒளி. ஒளி உறைவது மணி. "மணியாய் ஒளியாய்" என்று பாடினர் ஸ்ரீ அருணகிரி. மணியில் சிறந்தது கண்மணி. 'கண்மணியே' என்று கூவி அழைத்து விட்டால், இதைவிட அன்பின் அழைப்பு கிடையாது; கண்ணில் தங்கியது காக்ஷி உருவம்; பேதமாய்க் காணப் படுகின்ற உருவங்களெல்லாம், காண்பவன் கண்ணொளியில் ஒன்றாய் கூடுகின்ற நிகழ்ச்சி போன்றதுதான் சிவரூபம். அக்னி என்ற அபேத அன்பு, பேதமாய்த் தோன்றுகின்ற நீலத்தை விஷத்தை எரித்துக் கொண்டேயிருக்கின்றது. அன்பெனும் தெய்வீக நெருப்பில், அனுதியாய் எழுகின்ற பேதமென்றும், வேற்றுமை யென்றும் சொல்லப்படும் விஷத்தை எரித்தே நில்லுங்கள். இப்படி உபதேசிக்கும் சிவஸ்வரூபம்; அந்த குரு ரூபத்தைப் பார் என்பர், உருவ பேதங்களின் வேற்றுமை குலைந்து ஒருமையுற்று ஒளியாய் விளங்கும் சிவம் குருவே;

எங்கள் குரு விஷ்ணுவாயும் நிற்கின்றார். பாற்கடலில் உறைகின்ற நாராயணன், ஜலத்தின் அம்சமாய் விளங்குகிறான். அப்புவில் ஜனித்த இந்திரியம் நாவு. விநியோகம் ரஸம். ரஸத்தில் தெவிட்டாததுவும், சிருஷ்டிக்கே ஆதாரமாக அமைந்ததும் ஞான ரஸம், பேரின்ப ரஸம், அனுபூதி ரஸம்.' தொண்டர்கள் நாம ரஸத்தில் உணர்வதும் அதுதான். ரஸ ரூபமாக அமைந்து எங்கும் நிறைந்தது விஷ்ணு,

---

உற்பத்தி செம்பொன் உடமைபெரு வாழ்வை நம்பிச்
சர்ப்பத்தின் வாயிற் றவளைபோ லானேனே.

தத்துவ மாதலால், விஷ்ணு வடிவான ஞான குருவே என்றார். ஸ்ரீராமபிரான் அவதார காரணம் முடிவடைந்ததும், சரயு நதியின் ஜலத்துடன் ஜலமாய்க் கரைந்து விட்டார். மஹா'விஷ்ணுவின் பாதத்தில் உதித்ததாம் கங்கை. அது, விஷ்ணு வடிவமான, ஓர் குளிர்ச்சியான பனிக்கட்டி; பெருத்த கட்டி அது (iceberg)- கருணையின் உஷ்ணத்தால் உருகிக் கொண்டே இருக்க, அந்த உருக்கத்தில் ஏற்பட்ட வெள்ளத்தை கங்கையென அழைத்து, அன்பின் உருவான பரமசிவன் தன் சிரஸின் மேல் தரித்து, அதைப் புவியின் மிசை மாந்தருக்கு அளித்தனன் போலும். ஞான அனுபூதியே அன்பாதலால், பூததயை ஆதலால், பூதங்களிடத்தில் ஏற்பட்ட கருணையால் பல அவதாரங்க ளெடுத்தும், எத்தனையோ கோடி அவதாரங்களாக நிறைந்து நிற்பதும் விஷ்ணு வெனும் வடிவ தத்துவம் ஆதலால், எங்கள் குருவை விண்டுவாகவும் பார்.

ஞான ஒளியாகவும் ஞான அன்பாகவும் நிறைந்த ஏக குருவை, ஓதி ஓதி யுணர்வதுதான் நன்னெறி. ஒருமுகமன்றி, நான்முகமாக, பலமுகமாக ஓதினும் உணர்ச்சி கைகூடும். ஓதியக்கால் குருநாதன் ஓதிடும் தொண்டரை மலர் ஆசனத்தின் மேல் வைத்துக் காப்பாற்றுகின்றன். ஓதி உணர சித்தம் பிறந்தக்கால், ஓதிடும் முன்னரே ஏன்றிடும் மலராஸனம் வந்துவிடும்; 'மண்பிறந்த மாயமும் மயக்கமும் மறந்துபோய், எண்பிறந்த ஈசனோடு

கற்று விழுந்தவிளங் கன்றதுபோ லேயுருகிச்
சிற்றுகிச் சிற்றின்பஞ் சேர்ந்தனையே நெஞ்சமே.

இசைந்து வாழ்வ துண்மையே' என்பர் சித்தர். குரு வின் நிலை மோனம். மோனத்தில் பிறந்தது இசை; சப்தம். சப்தம் பிறந்த இடமும் இறந்த இடமும் ஆன பரம், தான் இசை என்ற தத்துவத்துடன் கூடி ஒன்று பட்டால்தான், பிறந்த அது தாயிடம் நம்மை அழைத்துச் செல்கின்றது. பண்ணுகிப் பாடலாகி நிற்கின்றார் ஈசன் என்றார் அப்பர். நான்முகனும் மறையோதி மறையோதி பரத்தை அடையும் முறையைக் குருவாய் உணர்த்துகின்றான். ஒருமை யுற்று மறையோதினுல், சப்தம் பிறந்த பரத்தில் நாட்டும். அம்முறையின்றிப் பேச்சில் திளைத்தால் இந்திரிய வேட்டைக்கு இரையாய் வெளியில் கிடத்தி விடும்.

ஞான ஒளியாய் விளங்கி, சிவமாய், கருணை ரஸ மாய் இனித்து, விஷ்ணுவாய், பாடல் மறையாய் நெறியாய் பிரமனுய் நிற்கின்றார் நமது குரு. நெறி யும் குரு; நெறியின் பயனும் அவரே.

உலகுக்கெல்லாம் ஏக குருவாய் விளங்குபவ ராதலால், எல்லா மதங்களின் உறை பொருளாய் நிற்பதும் ஏக குருவே. குருபேதம் பண்ணலாகாது. உண்மை ஒன்றுதான் என்றால், உண்மை பிறக்கு மிடம் குரு. மதபேதம் ஞானிகள் அறியார். மதங் களில் உறையும் ஏக நாயகனையேதான் கண்ணுறு வார்.

உள்ளத்தில் குடிகொண்ட தெய்வமே இதய கமல வாசனுய், நம்மை விட்டுப் பிரியாத குருவாய்

- மாடிருக்கக் கன்றிருக்க வைத்த பொருளிருக்க
'கூடிருக்க நீபோன கோலமென்ன கோலமே.

உறைந்திருக்க, குருவை எங்கே தேடுவது? தேடும் பொருள் இல்லையாம். உள்ளத்திலேயே உள்ள பொருளை உள்ளேயே தேடவேண்டுமாம். உணர்விப்பதும் உள்ளேயேதான். பதினன்கு உலகும் அடங்குவதும் உள்ளேயேதான். ஒவ்வொரு உயிருக்கும் உயிராய் நிற்கும் தேவன், ஒவ்வொருவர் உள்ளத்திலும் இருக்கின்ருன். இயல்பாக இருக்கின்ருன் என்ருல், பதினன்கு உலகும் அவனுள் அடக்கம் என்ருல், அறிவு எப்படி வெளியில் இருக்கும்? உண்மூக குருவை உள்ளேயே ஓர்ந்து பார்த்தால், 'தண்மை பெற்றிருக்கலாம் தவமும் வந்து நேரிடும்; கர்மதர்ம மான ஈசர் காக்ஷிதானும் காணுமே' என்ருர் சித்தர். குருப்ரஸாதம் ஆனந்தம் பேரானந்தம். ஓம் தத்ஸத்.

கதிர் காம யாத்திரை

கி. வா. ஜகந்நாதன்

திருக்கோயில்

(13-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கதிர் காம மென்னும் தலத்தைப் பற்றிப் பழங்கால முதற் கொண்டு பற்பல வரலாறுகள் வழங்கி வருகின்றன. புராண வரலாறு, கர்ண பரம்பரை வரலாறு, சரித்திர வரலாறு என்று அந்த வரலாறுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். கதிர் காமத் தல புராணம் செய்யுள் வடிவில் சி. நாகலிங்கம் பிள்ளை என்பவரால் இயற்றப் பெற்றிருக்கிறது. இத்தலத்தைப்பற்றி சொல்லும் வேறு பல செய்யுள் நூல்களும், அருணகிரி நாதர் பாடிய திருப்புகழ்ப் பாக்களும் உண்டு.

வீட்டைத்திறந்து வெளியை யொளியா லைழைத்துக்
காட்டும் பொருளிதென்று கருதிலையே நெஞ்சமே.

முருகப் பிரான் சூரனைச் சங்காரம் செய்யும் பொருட்டுத் தென்றிசைக்கண் எழுந்தருளினான். இடையே உள்ள பல தலங்களுக்குச் சென்று அங்கங்கே தங்கி மேற் சென்றான். அப்போது கதிர் காமத்துக்கும் எழுந்தருளி மாணிக்க கங்கையின் கரையில் தன் படை வீட்டை அமைத்துக்கொண்டு தங்கினான். அந்த இடம் ஏமகூடம் என்று சொல்லப் பெறும். அப்பால் சூரனை நாடிச் சென்று அவனைப் போரில் வென்று மீண்டான். அப்படி மீண்ட பொழுது கதிர் காமம் வந்து, அங்கே நவகங்கைத் தீர்த்தம் உண்டாக்கினான். சிந்தாமணி யாலயத்தில் கோயில் கொண்டெழுந் தருளினான். தேவர்களும் முனிவர்களும் வந்து வழிபட்டு உய்ந்தனர்.

இவ்வாறு கதிர் காமப் புராணம் சொல்கிறது. தக்ஷிண கைலாச புராணத்தில் பின்வரும் செய்தி உள்ளது.

'பல கோடி கதிரவன் உதித்தாலனைய ஒளிபரப்பும் சிந்தாமணியாலயத்தில், நவமணி குயிற்றியசிங்காதனத்தில், வள்ளியெம்பெருமாட்டியுடனும் தேவயானை யம்மையாருடனும் கதிரைமலைப் பெருமான் வீற்றிருந்தருள்கிறான்....கதிர் காம நகரம் முக்கோண வடிவமான தெருக்களை உடையது. அதன் நடுவே ஒரு சோதி மண்டபமாகிய ஆலயம் உண்டு. பொற்றகடு பரப்பி மணிகளை இழைத்த மண்டபம் அது. அதன் நடுவில், இந்திர நீலமணிச் சிங்காதனத்தின் மேல் இரு தேவியரோடு வேலைத் திருக்கரத்திலே பிடித்து முருகன் எழுந்தருளி யிருக்கிறான். இந்தச் சோதிமணி மண்டபத்திற்கு எதிரில் வள்ளியம்மை திருக்கோயில் இருக்கிறது. அதன் அருகிலே சமாதி யோக மண்டபம் ஒன்று உண்டு.' *

இந்த வருணனைகளுக்கும் இப்போது உள்ள திருக்கோயிலுக்கும் தொடர்பு ஒன்றும் இல்லை. கோயிலின் திருவாசலில் ஒரு பெரிய பழைய மரக் கதவு இருக்கிறது. அதைத் திறந்தவுடன் முன்னே அர்த்த மண்டபம் என்று சொல்லத் தகும் இடம் ஒன்று இருக்கிறது. அங்கே குத்து விளக்குகள் தூபச் சட்டிகள் முதலியன

* கதிர் காமம்—முதலியார் குல. சபாநாதன் எழுதியது, பக்கம், 7.

உடலைத் தகர்த்தே உயிரையமன் கொள்கையிலே
யடக்கமாய் வைத்தபொருள் அங்குவர மாட்டாதே.

இருக்கின்றன. அதற்கு அப்பால் உயர்ந்த மேடைமேல் அடுத்த கட்டு இருக்கிறது. அது தான் கோயில். அதற்கு ஐந்தாறு படிக் கட்டுகள் இருக்கின்றன. படிக்கட்டுகளின் மேல் கதவு நிலை யிருக் கிறது. ஆனால் அதைத் திரையிட்டு மறைத்திருக்கிறார்கள். திரைக்குப் பின்னால் கர்ப்பக் கிருகத்துக்குள் என்ன இருக்கிறது என்பது, முருகனுக்கும் அங்கே பூஜை செய்யும் பௌத்தர்களுக் குமே தெரியும்.

சிவாலயங்களுக்குட் சிறந்தது சிதம்பரம். கோயில் என்று சொன்னாலே அது சிதம்பரத்தைத் தான் குறிக்கும். சிதம்பரத்தில் பொன் மன்றத்தின் உள்ளே என்ன இருக்கிற தென்பது யாவ ருக்கும் தெரியாது. அது இரகசியம். அதைக் காட்டிலும் பரம இரகசியமாக இருப்பது கதிர் காமக் கோயில்.

கர்ப்பக் கிருகத்தின் திருவாயிலில் தொங்கும் திரையில் முருகன் திருவுருவம் உள்ளது. இரண்டு தேவிமாரோடும் மயிலின் மேல் வீற்றிருக்கும் திருக்கோலம். இது சமீபத்தில் போட்ட திரை. இந்த ஓவியத்திரை இன்னாரால் உதவப்பெற்றது என்ற குறிப்புக் கூட ஆங்கிலத்தில் திரையின் ஒரு மூலையில் இருக்கிறது. இந்தத் திரைக்குப் பின் சில திரைகள் இருக்கின்றன. அவ்வப் பொழுது கிடைக்கும் திரைகளை ஒன்றன் மேல் ஒன்றாகப் போட்டிருக்கிறார் கள். திருவாயிற் படியின் கீழே நின்று இந்தக் கோயிற் பூசாரிகள் அந்தத் திரைக்கே பூசை புரிகிறார்கள்.

இங்கே பூசை செய்பவர்களைக் கப்புராளைமார் என்று சொல்கிறார்கள். அவர்கள் பௌத்தர்கள். வாயைக் கட்டிக் கொண்டு மௌனமாகப் பூசை செய்கிறார்கள். தூபதீபம் காட்டி நிவேதனம் செய்கிறார்கள். தரிசனத்துக்கு வருகிறவர்கள் பூசை நடக்கும் போது பார்க்கலாம். மற்றச் சமயங்களிலும் அந்த முன் மண்டபத்தில் நின்று தரிசனம் செய்யலாம். புறக்கண்ணால் பார்ப் பதற்குத் திரை ஒன்று தான் இருக்கிறது. அகக்கண்ணால் பார்ப் பதற்கு எத்தனையோ உண்டு.

தாவாரந் தோறும் தலைபுகுந்த நாய்போல
ஆகாத நெஞ்சமே யலைந்து திரிந்தாயே.

ஆடி மாதம் இங்கே திருவிழா நடைபெறுகிறது. உள்ளே யிருந்து அப்போது கப்புராளைமார் எதையோ பரிவட்டத்துக்குள் மூடி எடுத்து வருவார்கள். அது விக்கிரகமா, பெட்டியா, வேறு பொருளா என்று தெரியாது. பெட்டி என்று தான் சொல்கிறார்கள். மூடியபடியே கொண்டுவந்து யானையின் மேல் ஏற்றுகிறார்கள். அலங்கரித்த யானை நின்று இந்தப் பெட்டியை ஏற்றிக்கொள்வதற்காக ஓர் இடம் இருக்கிறது. யானைமேல் ஏற்றிய பிறகு ஊர்வலம் புறப்படும். இந்த உலாவைப் **பெரஹரா** என்று சிங்களத்தில் சொல்கிறார்கள். கண்டியில் நடக்கும் பெரஹரா மிகப் பிரசித்தமானது.

உற்சவத்தின் போது லட்சக் கணக்கான மக்கள் கூடுவார்கள். எல்லோரும் கட்டி கட்டியாகக் கற்பூரத்தை அகலில் ஏற்றித் தலைமேல் வைத்துக் கொள்வார்களாம். கோயிலின் முன்னுள்ள வெளியிலும், குவை குவையாகக் கற்பூரத்தைஏற்றிவைப்பார்கள். இந்தக் கற்பூர வெளிச்சமே இராக்காலங்களில் பல விளக்குகளை ஏற்றி வைத்தது போலத் தோன்றுமாம்.

இந்தக் கோயிலில் ஒவ்வோராண்டிலும் நான்கு திருவிழாக்கள் நடைபெறுகின்றன. சித்திரை மாதப் பிறப்பன்று ஒரு திருவிழா நிகழும். ஆனி அல்லது ஆடி மாதத்தில் பத்தற்கால் நடும் விழா நடைபெறும். ஆடி அல்லது ஆவணியில் ஒரு திருவிழாவும், கார்த்திகை தீபத்தின்போது ஒரு திருவிழாவும் நடக்கின்றன. ஆடித் திருவிழாவே மிகவும் பெரியது. பதினைந்து நாட்கள் இந்தத் திருவிழா தொடர்ச்சியாக நடைபெறுகிறது. இறுதியில் நீராட்டு விழாவோடு உற்சவம் நிறைவேறும்.

கதிர்காம வேலனுடைய திருக்கோயிலை அடுத்து, மேல்திசையில் மற்றொரு சிறிய ஓட்டுக் கட்டிடக் கோயில் இருக்கிறது. அது விஷ்ணு கோயில் என்று சொல்கிறார்கள். அதன் பின்புறம் ஒரு பெரிய அரசமரம் இருக்கிறது. இந்த மரத்தை மிகவும் புனிதமுடைய தெய்வத் தருவாகப் போற்றி வருகிறார்கள். பௌத்தர்களுக்கு அரசமரம் தெய்வத் தன்மையுடையது. அதனடியில் புத்தர்

நரதவித்து தன்னை நயமுடனே பாராமல்
போத மயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே.

ஞானம் பெற்றாராதலின், அதனை ஞானத் தருவாக அவர்கள் கொண்டாடுவார்கள். போதி விருக்ஷம் என்று சொல்வார்கள். இலங்கையில் போ (Bo Tree) என்று வழங்குகிறார்கள்.

கதிர்காமத்தில் உள்ள அரச மரத்தில் பௌத்தர்கள் வெள்ளைக் கொடிகளைக் கட்டியிருக்கிறார்கள். இது அவர்கள் வழக்கம். அங்கே மண்டியிட்டு வணங்குகிறார்கள். முஸ்லீம்களும் இந்த ஆலயத்துக்கு வந்து தொழுகிறார்கள். முருகன் எல்லாச் சமயத்துக்கும் பொதுவானவன் என்ற நினைவு இங்கே உண்டாகும். குழந்தைப் பிரானிடம் காதல் கூராதவர்கள் யார்? பௌத்தர்கள் கதிர்காமக் கடவுளைக் காவல் தெய்வமாக வைத்து வழிபடுகிறார்கள்.

இந்தக் கோயிலின் எல்லைக்கு அப்பால், அதனோடு ஒட்டிக் கீழ்த் திசையில் தேவயானை அம்மையாருக்கு ஒரு கோயில் இருக்கிறது. அது கிழக்குப் பார்த்த சந்நிதியை உடையது. அதன் விமானம் தமிழ்நாட்டுக் கோயிலில் உள்ளதுபோல இருக்கிறது. அங்கே பூசை புரிபவர் தமிழர். அந்தக் கோயிலின் நிர்வாகமே தனியாக மற்றவர்களிடம் இருக்கிறது.

கோயிலுக்குள்ளே உள்ள பொருள் என்ன? பெட்டி ஒன்று இருக்கிறது என்கிறார்கள். அதற்குள் என்ன இருக்கிறது? அதைக் கண்டாருமில்லை; விண்டாரும் இல்லை. யந்திரம் இருக்கிறதென்று சொல்வார் சிலர்; மாணிக்கத்தால் அமைந்த விக்கிரகம் இருக்கிறதென்று கூறுவர் சிலர். வேல் இருக்கிறதென்று ஊகிப்பவர் சிலர்; ஒருவரேனும் இன்னதுதான் இருக்கிறதென்று திட்டமாகச் சொல்வதில்லை. ஆனால் லட்சக் கணக்கான மக்களை இழுக்கும் சக்தி இதனுள்ளே இருக்கிறதென்பது மாத்திரம் உண்மை. அந்தச் சக்தியே இந்திய மக்களை வா வா என்று அழைக்கிறது. உடம்புக்கு நேரும் துன்பங்களையும் பொருட் செலவையும் பாராமல் பக்தர்களை வந்து மன முருகி வழிபடச் செய்யும் பேராற்றலையுடையது அது. எத்தனையோ காலமாக அருட் புலவர்களாலும், அன்பர்களாலும், ஞானியராலும்,

---

மெய்வாழ்வை நம்பி விரும்பியிக வாழாமல்
பொய்வாழ்வை நம்பிப் புலம்பினேன் பூரணமே.

யோகியராலும் பாராட்டப்பெறும் சிறப்புடையது. கடவுள் இல்லை என்ற மயக்க உணர்வு பெருகும் காலத்திலும், மக்களை இழுத்துக் கூத்தாடச் செய்கிறது அது; மூர்த்தி இல்லை; ஆனாலும் கீர்த்தி மிகமிகப் பரந்து பெருகி வருகிறது.

கதிர்காமக் கடவுளின் பெயரைக் குழந்தைகளுக்கு வைப்பவர்களும், அவன் பெயரால் வேறு வேறு இடங்களில் கோயில் கட்டித் தொழுகிறவர்களும், அவன் பேரைச் சொல்லிப் பிழைப்பவர்களுமாகப் பலர் கதிர்காம நினைவை எல்லா இடங்களிலும் எழுப்பிக் கொண்டே இருக்கிறார்கள். இதற்கு முன்பும் பலர் இப்படிச் செய்தார்கள். இனியும் செய்து வருவார்கள்.

ஆத்ம போதம்

(நா. பிச்சுமணி, சி. சுப்ரமணியன், மாடுங்கா)

அன்றொரு நாள்;

ஆம், அன்றொரு நாளும் உண்மையில் ஒரு நாளே தான்! கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று உண்ணுவதும், உறங்குவதையுமே வாழ்க்கையின் லக்ஷியங்களாகக் கொண்டு, கழிந்து செல்லும் நம் வாழ்வின் பல் நூறு தினங்களில் என்றும் மறக்க முடியாத இன்ப அநுபவங்கள் பல செறிந்த அந்த ஒரு நாளே உண்மை நாளாயிற்று. என் வாழ்விலே பொன் தகட்டில் வைரத்தாலாய எழுத்துக்களில் பொறிக்கத் தக்க என் கனவு பலிதமான நன்னாள் அதுவே! மனிதனை மனிதனாக்கி, இல்லை, தேவனாக்கி, என் வாழ்வைச் செம்மைப் படுத்திய இன்ப நாள் அதுவே! இன்றும் இன்பக் கனவுகள் கண்டு, நினைக்குந்தோறும் மகிழச் செய்து, என் மனத்திரையிலே அழியா

. இந்த வுடலுயிரை யெப்போதுந் தான்சதமாய்ப்
பந்தமுற்று நானும் பதமழிந்தேன் பூரணமே.

இடம் அமைத்துக் கொண்ட அமரராளும் அதுவே வென்றால், சற்றும் மிகையாகாது.

கடுங் கோடை காலம். வழக்கமான மாலை நேரம்; திருச்சியின் தெருக்களிலே அநேக மாயிரம் மக்கள் அன்றைய வயிற்றுப் பாட்டிற்கு முடிக்க வேண்டிய கடன்களை முடித்துக் கொண்டு, தன் மனைவி, குழந்தைகளைக் காணும் ஆவலுடன், வெகு வேகமாய்ச் சென்று கொண்டிருந்தார்கள். அஃதே போல் பள்ளிகளி லிருந்து பல சிறுவரும், சிறுமியரும் திறந்து விடப்பட்ட கூட்டி லிருந்து கும்பல் கும்பலாக குதித்தோடி வரும் ஆட்டுக் குட்டிகளைப் போல், தம் தாய் தந்தையரைக் காணச் சென்று கொண்டிருந்தனர். ஆனால் கடும் வெய்யிலின் காரணத்தால் தெருக்கள் தண்ணீரைக் காணாது வறண் டிருந்தன போல், என் மனமும் இவை ஒன்றையும் கவனிக்க விரும்பாது, ஜன்னல் வழியே ஆகாசத்தின் சூன்யத்தை ஏக்கத்துடன் உற்று நோக்கிக் கொண்டிருந்தது. மனதில் இனம் தெரியாத ஒரு சஞ்சலம்!

பகல் முழுவதும் மிக உக்ரமாகக் காய்ந்து அலுத்துப் போன கதிரவன் சற்று ஓய்வெடுத்துக் கொள்வான் போல், மேகங்களினூடே மறைந்தான். திடீரென்று வானம் மப்பிட்டது. எனக்கு வீட்டில் இருப்பே கொள்ளவில்லை. பாலை நிலத்தில் நடந்து களைப்புற்று, பல தினங்களாகத் தண்ணீரையே காணாது, தூரத்து வெற்று நிலத்தைத் தண்ணீரென நினைந்து, பலதரம் இறுமாந்து ஆவலுடன் தண்ணீரைத் தேடிச் செல்லும் ஒரு வழிப் போக்கன் போல், வாழ்க்கையின் வழிப் போக்கனாய், நான் எங்கு

மாதர் பிரபஞ்ச மயக்கத்திலே விழுந்து
போத மயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே.

செல்ல வேண்டும் என்ற விவரம் தெரியாது, யாரையோ தேடிக் கொண்டு போகிறவன் போல் கால் சென்றவிட மெல்லாம் நடந்தேன்.

திருச்சி ஜில்லாவிலே, ஸ்ரீரங்க புண்ய க்ஷேத்ரத்திலே பார்ப்போரைப் பரவசப் படுத்தி, உள்ளன்புடன் தரிசிப் போருக்குத் தத்க்ஷணம் முக்தி யளிக்கும் ஸ்ரீரங்கநாதர் ஆலயமும், அதையடுத்து ஓடும் காவேரிநதியும் உலகறிந்த பிரசித்தம். நடந்துகொண்டே இருந்த நான், ஏதோ புதையலைக் கண்டெடுத்தவன் போல் காவேரியாற்றின் கரைக்குச் சென்று கோபுரத்தை உற்று நோக்கினேன். ஆகா! ஸ்வர்ணத்தா லானதும், மாலை சூரியனின் செங்கதிர்கள் பட்டு இன்னும் அதிக சோபையுடன் ப்ரகாசிக்கும் என் ஆண்டவனின் திருக்கோயிலின் சிகரமாய், அக்கோபுரமானது என் உள்ளத்தை ஒருங்கே கவர்ந்தது. 'என்னே! மனிதர்கள் தான் சிற்றின்பப் பொருள்களையும், பொன்னும் மணியும், பொருளும் விரும்புகிறார்களென்றால், நீயும் இனியதென்றல் வீசும் காவேரி யாற்றின் கரையிலே, தனக்கென்று அழகானதோர் பொன்கோபுரமும், கலைக்கோயிலும் சமைத்துக் கொண்டாயோ! அப்பனே! உன்னாலேயே உண்டாகி, உன்னாலேயே உஜ்ஜீவிக்கும் இவ்வழகில், நீயே மயங்கி இவ்வேழையை மறந்து விட்டாயோ! என்று ஏங்கினேன்.

ஒரு கணம் தான். பின் கடலான தன் காதல னில்லம் செல்லும் மகிழ்ச்சியால், ஹம்ஸ பக்ஷியை யொத்த தூய வெண்மை நிறத்துடன் கரையிரண்டும் புரண்டோடும் காவேரி என் கண்ணைக் கவர்ந்தாள். அலைகளின் மோதுதலால், நீந்தும் மீன் கூட்டங்கள் ஒரு முறை கரையில் தாக்கி

மண்பெண் பொன்னாசை மயக்கத்திலே விழுந்து
கண்கெட்ட மாடதுபோற் கலங்கினேன் பூரணமே.

எறியப் படுவதும், துடிக்கும் அம்மீன்கள் மீண்டுமொரு அலையால் மறுபடியும் நதியில் இழுத்துக் கொள்ளப்படுவது மான காட்சி, ஆண்டவன் தன் குழந்தைகளான நம்மை விளையாட்டாகத் தன்னிடமிருந்து ஒரு க்ஷணம் பிரித்துக் கொண்டு, நாம் கலங்கித் தவிக்குங் காலையில் மீண்டும் நம் மைத் தடுத்தாட் கொள்வதை நினைப்பூட்டியது. கண்கொட் டாது அக்காட்சியையே பார்த்து நின்றேன். கரைகளி ரண்டிலும் ஏராளமான உயர்ந்த அழகிய கமுகு மரங்களும், தென்னை மரங்களும் காவேரியின் செல்லக் குழந்தைகள் போல் கவலையற்று வளர்ந்திருந்தன. இக்காட்சியை எவ் வளவு நேரம் உற்று நோக்கிக் கொண்டிருந்தேனோ எனக்கே தெரியாது.

திடீரென, அந்த இடத்தின் நிசப்தத்தைக் கலைப்பது போல், காவேரியின் அலைகளி லிருந்து துள்ளும் நீர்த்திவலை களின் சேர்க்கையால் குளிர்ச்சியானதும், கோயில் ப்ராகா ரத்தைச் சுற்றியுள்ள நந்தவனத்தில் ஆயிர மாயிரமாக ஆண்டவன் பணிக்கென்று பூத்துக் குலுங்கும் மலர்களின் சம்பந்தத்தால் வாசனை யுடையதுமான கரைகளில் வளர்ந் துள்ள மரங்களின் இலைகளசைய, மெதுவாக வீசும் இளம் தென்றலின் கலகல சப்தம், நான் வெகுநாளாகத் தரிசிக்கத் தவம் கிடக்கும் என் அப்பன் ஆருயிர்க்கினிய அம்பிகா நாதனிடமிருந்து ஏதோ செய்தி கொண்டு வந்திருப்பது போல், என்னை மெய்சிலிர்க்கச் செய்தது. நான் ஒரு நிமிஷம் கண்ணை மூடி மௌனியானேன். மனதில் ஆண்ட வனின் உருவம் தவிர வேறு எதுவும் தோன்ற மறுத்தது. கண்கள் தம்மை யறியாமலே நீரைக் கக்கின. கண் திறந்த

சகலதிரத்தின் மேலிருக்குஞ் சற்குருவைப் போற்றாமல்
அகத்தினூட வாணவத்தா லறிவழிந்தேன் பூரணமே.

மீண்டும் நாலு பக்கங்களிலும் கண்களைச் செலுத்தினேன். கோவிலைச் சுற்றி ஐராவதன் பூங்காவோ என ஐயுறச் செய்யும் உபவனத்தில், வான வில்லில் காணும் பல் வேறு நிறங்களையும் ஒருங்கே பிரதி பலிப்பனவும், ஆண்டவன் பணிக்குத் தயாரானவை போல், பரந்த ஆகாயத்தின் எண்ணிக்கையற்ற நக்ஷத்திரக் கூட்டங்களைப் போல், மலர்ந்த புஷ்பங்களின் புன்சிரிப்பு என்னை மிகவும் வாட்டமுறச் செய்தது. தான் பிறந்த அன்றே கவலையேயின்றி அவனடி சேரும் பாக்கியம் பெற்றிருந்த அவை, அவனருளுக்கு ஏங்கித் தவிக்கும் என்னைக் கண்டு ஏசிப் பரிகசிப்பவை போலிருந்தன. அவற்றின் மலர்ச்சியும், காற்றில் ஆநந்தமாக அசைந்தாடுதலும், அவற்றின் ஆணவத்துடன் கூடிய அகக்களிப்பை நன்கு தெரிவித்தன. வெருண்டு திரும்பினேன். அதை யொட்டினாற்போல் மரங்களின் இலைகளின் சல சல வென்ற சப்தமும், காவேரியோட்டத்தின் பேரிரைச்சலும், பக்ஷிகளின் கல கல சப்தமும்கூட கை கொட்டி நகைத்து என்னைத் திகைக்க வைத்தன. ஆம்! எளியாரைக் கண்டால் வலியாருக்கு எச்சுக் காட்டுதானே! என்முகம் சுருங்கிற்று. ஹ்ருதயத்தின் ஆழத்தி லிருந்து ஒருநீண்ட பெருமூச்சு எழுந்தது. (தொடரும்)

வீரபாண்டியர்

ரசபதி

தூத்துக்குடி, பாண்டி நாட்டின் ஒரு பழம்பதி. திருமந்திரம் என்றும் அதற்குப் பெயருண்டு. அவ்வூரில், பாணர் குலத்தில் வந்தார் ஒரு பாவலர். வாக்கு சித்திவாய்த்தவர். கவிச்

நரம்புத் தசை தோலெலும்பு நாற்றத்துக் குள்ளிருந்து
வரம்பறிய மாட்டாமல் மயங்கினேன் பூரணமே.

செல்வமும் பொருட் செல்வமும் உடைய அவர், கண் மூடித் தனமான ஆராய்ச்சியில் காலங் கழிப்பதில்லை. ஆறெழுத்து அவர் நாவில் என்றும் இன்ப விருத்தம் செய்யும். வீரபாண்டியர் என்பது அவர் பெயர்.

முன்னைய தவமோ, காமத்தை உருவெற்றும் நலமோ, காணும் பொருள்களி லெல்லாம் முருகன் கைவண்ணமே அவர்க்குக் காட்சியாயது. எதைச் செய்தாலும், கந்தனை வந்தித்தே செயலில் ஈடுபடும் அவர் சித்தம்.

பலர் தூண்ட, அவர் பாடிய பார்வதி பிள்ளைத் தமிழ் ஒன்று; உருகிய மனமொடு முருகனைப் பாடிய பாக்கள் பல.

மனோதர்மம்

வரவர அன்புக்கனல் வளர்ந்தது. ஆடவர் பலர் அணுகினர்; மொய்குழலார் பலர், அன்பு மிகுந்து மொய்த்தனர்; அருள் நலம் பெற்ற கவிஞர் இவர் என்பது, அவர்களுடைய எண்ணம்.

என்ன இது? புலவரைச் சுற்றிப் பூவையர் கூட்டம் என்று, பின் முகமாக எங்கும் எள்ளல் பேச்சுக்கள் எழுந்தன. ஆம். கனல் ஒப்பர் காரிகையர்; நெய்க்குடம் போல்பவர் ஆடவர்; இரு திறத்தரும் தம் தம் இடத்தில் இருத்தலே நலம்.

செய்தி, புலவர் செவிக்கு எட்டியது.

தாரத்தைத் தாரம் என்பேன்: மற்ற மாதரைத் தாயர் என்பேன்;
சூரைப் பிளந்தவன் ஆணை; சொன்னேன் என் சுபாவத்தையே!.

என்ற ஒரு பாடலைப் பாண்டியர் எவரும் கேட்கப் பாடினர். இந்த மன நிலை, ஆகூழால் அமைவது; உலகைத் துறந்து, இரந்துண்டு, மீண்டும் மெல்லி நல்லார் தோள் விரும்பும் ஆடவரும் உளரெனில், அது அவர்தம் போகூழின் போக்கு என்று புகலும் இந்த உலகம்.

தாய்க்கடன்

மாலை நேரம். 100 மாங்காய், 100 வாழைப்பழம், 100 கவுளி வெற்றிலை இவைகளைக் கொணர்ந்தார் மூவர். ஏன் இவை? அனுப்பியது யார்? நீங்கள் யார் என்றார் புலவர் தேவியார்.

நிரந்தரமா யெங்கு நின்றுவிளை யாடினதைப்
பரமதுவே யென்னப் பதமறியேன் பூரணமே.

அம்மா! கவிஞர் கந்தனை வந்தித்து கவிபாடுவதே தொழி லானார்; நாளை அவர் தாய்க்குத் திவசம்; அதற்குப் பயன்படும் இவை யென்று, செந்தில் செல்வர் எம் மூலமாக அனுப்பியுளர்; கடிதுவர எங்கட்குக் கட்டளை; போய் வருகிறோம் என்று, பாண் டியர் மனைவியார் பதிலுரைக்குமுன் விரைந்து போயினர்.

அவர்கள் சென்ற அதே சமயம், கவிஞர் தம் மாளிகை யடைந்தார்.

நாளை தங்கள் அன்னையார்க்குத் திவசமாமே! எனக்கும் நினைவில்லை; தாங்களும் நினைவுறுத்தவில்லையே! யாரோ செந் தில் செல்வராம்; திவசத்திற்குப் பயன்படு மென்று இவை களை யனுப்பியுளர் என்று வந்தன பொருள்களைக் காட்டினர் மனைவியார்.

திகைத்தார் கவிஞர். ஆம். கடமையை நினைவுறுத்தியவர், செந்தில் செல்வர் தான். பயன்படு பொருளைக் காலத்தில் அனுப்பியதும், அவருடைய கருணையைக் காட்டுகின்றது என்று இரு பொருள் பட உரைத்து, தன்னில் எழுந்த மெய்ப்பாட்டை மறைத்தார். இரவெலாம் இங்ஙனம் இடையிடை உதவும் குகன் அருளை நினைந்து குதூகலித்தது அவர் மனம்,

பொழுது விடிந்தது. தேங்காய் கருதி, ஒரு தென்னந் தோப் பிற்குச் சென்றார். அதற்கு உரியவன் அங்கு இருந்தான். கவிஞரைக் கண்டு வணக்கம் செய்தான்.

அப்பா! தேங்காய் 12 தேவை! என்ன விலை ?

பணம் வாங்க மனமின்றி, மூன்று காய்களைத் தந்தான் அவன்.

விலை சொல்லவில்லையே என்றார் கவிஞர்; தோப்பிற்கு உரியவன் நகைத்தான்.

ஒருகாய் ஒரு வெள்ளி; மூன்று காயானால் விலை யில்லை.

இப்படியும் ஒரு பேரம் இருக்கிறதா! சரி. எனக்கு இன்னம் 9 காய்கள் வேண்டுமே!

மண்ணாசைப் பட்டேனை மண்ணுண்டு போட்டதடா
பொன்னாசை பெண்ணாசை போகேனே யென்குதே.

மரம் ஏற ஆள் இல்லை ஸ்வாமி! காயுதிர ஒரு கவி பாடுங்கள்; அன்பருக்கு முருகன் அருள்கிறான் என்று உலகம் கூறுகிறது; அதை யான் காண அருள வேண்டும் தாங்கள்; இது என் பிரார்த்தனை.

முருகா! முருகா! என்றார் புலவர் முதலில்.

மாங்காய் தந்தீர் வெற்றிலை தந்தீர் வாழைப்பழம் தந்தீர்!
தேங்காய் நெற்றும் தந்திட வேண்டும் செந்தூர் முருகோனே!

என்று பாண்டியர் வாய் பாடியது. உடனே நல்ல காய்கள் 100 உதிர்ந்தன. தோப்பிற்கு உரியவன் வியந்தான். புலவரை வீழ்ந்து வணங்கினான். இவ்வளவும் வேண்டாம் என்று புலவர் எவ்வளவு மறுத்தும், அவர் மாளிகைக்குக் காய்கள் நூறையும் ஆட்கள் மூலம் அனுப்பி வைத்தான். திவசமும் இனிது நிகழ்ந்தது.

வழி விடுகை

புலவர் ஒரு நாள் திருச்செந்தூர்க்குப் புறப்பட்டார். பொருநை நதி, வெள்ளம் புரண்டு வருகிறது. எப்படிச் செல்வது என்று மனம் அயர்ந்தது. முருகா! முருகா என்கிறது வாய். உடனே,

பொருநை கரைபொருது போம்வெள்ளம், உன்னி
வருமென்னைத் தான் தடுத்தல் மாண்போ—திருச்செந்தில்
தேவாஇவ் வெள்ளமெனை யென்செய்யும் நின்னடியேன்
ஆவாஇப் போதே அருள்.

என்று பரனை நினைந்து பாடினார்; துணிந்து வெள்ளத்தில் இறங்கினார். என்ன வியப்பு! தமிழ் மணத்தில் ஊறிச் சுவை பதிந்துள பொருநை, உக்ரவேகம் தணிந்து வழிவிட்டது. முருகா முருகா எனும் நாமபலம் துணையாக, கவிஞர் நதியைக் கடந்தார். திருச்செந்திலானைச் சேவித்தார்.

வரும் வழியில்

ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்பகாலம் அது. கும்பினியாரிடம் சம்பளம் பெறும் அதிகாரி ஒருவன்; அவன் தமிழன்; ஆடையணி

ஐந்து புலனு மடங்கேனே யென்குதே
சிந்தை தவிக்கிறதுந் தேறேனே யென்குதே.

கனால் பளபளக்கும் மேனியன். ஆற்றூர் கிராம எல்லை விருந்த் புளிய மரத்தடியில், இறுமாந்து பீடத்தில் இருக்கின் றான். வருவார் போவாரெல்லாம், வணங்கிச் செல்கின்றனர்; பதில் வணக்கமின்றி மதர்த்திருக்கும் அவனை, வழிவந்த பாவாணர் பார்த்தார்.

வாளா புலவர் வணங்காது செல்வதை, அதிகாரி கண்டான். இழுத்து வாருங்கள் அவனை யென்று இடி முழக்கம் செய்தான். குரல் கேட்டதும், கவிஞர் தடைப்பட்டு நின்றார். காவலர் அணுகுமுன், கவிஞரே முன்னேறி வந்தார்.

உறுத்து நோக்கினன் உத்தியோகஸ்தன்.

உத்தியோகம் உயர்ந்திருக்கலாம்; அதற்கா இறுமாப்பு! குடிகளிடம் செய்து கொள்ளும் அறிவிப்பில், தங்கட்குக் கீழ்ப்படிதல் உள்ள என்று கையெழுத்திடும் இவர்கள் தலையெழுத்து மட்டும் கோணல் தானோ? எழுத்திற்கும் செயலுக்கும் தொடர்பில்லா இவர்களை என்னென் றுரைப்பது என்று எண்ணியது கவிஞர் மனம்.

வருவது வருக என்று வந்தவர், அதிகாரியின் அண்மை யிலிருந்த சரி யாசனத்தில் அமர்ந்து, ஏன் அழைத்தாய் என்றார்.

கொதித்தது மனம்; சிவந்தன கண்கள்; படபடத்தது மீசை. யார் நீ என்று உறுமினன் அதிகாரி.

முருகனடியான் என்றார் பாண்டியர்.

மூடு வாயை! யார் தெரியுமா நான்?

தெரியும்! நீ கறுப்பன்; வெளுப்புக்கு அடிமை.

வளர்ந்தது சீற்றம். காவலர் கவிஞரை யறிவர்; அவரை யதட்டவும் அஞ்சுகிறது நெஞ்சம். வாளா இருப்பினும், அதி காரி சிறுவன். அவர்கள் நிலைமை, இருதலைக் கொள்ளியாக இருந்தது. அவர்களில் ஒருவர் துணிந்தார். அதிகாரியை விநய மொடு அணுகினர்.

புல்லாகிப் பூடாய்ப் புலர்ந்தநாள் போதாதோ
கல்லாய் மரமாய்க் கழிந்தநாள் போதாதோ.

இவர், நிறைவுடைய புலவர். வாக்கு சித்தியுண்டு. பரம னருள் பெற்ற பக்தர். சிறிது சிந்திக்க வேண்டும் என்றார். அதன் பின் அணிந்த மற்றவரும், ஆம் ஆம் என்றனர்.

அறையுண்ட வேங்கைபோல் அடங்கிய அதிகாரி, சிறிது அஞ்சினன்; எனினும் அதை வெளிக்குக் காட்டவில்லை.

புலவரே! உமது திறம் விளங்க இந்தப் புளியமரக் கிளை முறியப் பாடும். முடியாதேல், உமக்குப் பரிந்தவர் தலை நிலத்தில் உருளும் என்று, விறு விறுப்பாகக் கூறினன். சொன்ன படி செய்பவன் அவன் என்பதை அவன் முகம் அறிவிக்கிறது.

உடனே ஒரு கிளையில் அடையாளம் உன் கையால் இடு என்று அவர் கூறியதும், வெண் சுண்ண அடையாளத்தை அதி காரி வைத்தான்,

எப்படியும் செந்தூர்க்(கு) இறைவா இப்புளியங்
கொப்பொடிய வேண்டும் குருபரா—செப்பிளைய
கொங்கைக் குறத்தி கொழுநாநம் தெய்வானை
மங்கைக் கிசைந்தகண வா

என்ற பாடல், பாண்டியர் காவில் பிறந்தது.

கத்தரிக் கோலால் கத்தரித்ததுபோல, முறிந்து விழுந்தது கிளை. முறிபட்ட பகுதியில், வெண்சுண்ண அடையாளமும் இருந்தது.

அஞ்சினன் அதிகாரி. கிளை விழப் பாடிய வாய், தலை விழ என்றிருந்தால் என்னாகும் என்று எண்ணியபோது, குழம்பியது மனம்; வியர்த்தது உடல். அணிகளை யெல்லாம் கழற்றி, கவிஞர் அடியில் விட்டு மன்னிக்க வேண்டுமென்று வணங்கினன்.

அணிகலனு! எனக்கு ஏன்? வேண்டுமேல், காலுமுகத் தானைத் திருத்திய ஆறுமுகம் உளது. முனைப்படங்கி, உத்யோ கத்தில் முறையாக நடந்து கொள் என்று புத்தி புகட்டி, அங்கிருந்து தனது ஊர் வந்து சேர்ந்தார்.

உன்னைத் துதியேனோ ஊர்நாடி வாரேனோ
பொன்னடியைப் பாரேனோ பூரித்து நில்லேனோ.

குடும்பகோஷம்

புலவர்க்கு ஒரு புதல்வி. கணவனை யிழந்த தங்கைக்கு ஒரு மைந்தன். குடும்பத் தூண்டுதலால், இளம் பருவத்திலேயே, மகளை, தங்கை மகனுக்கு மணமுடித்துத் தந்தார். மணச்செய்தி, இளம் பிள்ளை விளையாட்டாக இருந்தது.

புதல்வி புத்தி யறியுமுன், மருமகன், வணிகருடன் சேர்ந்து, கடலிடை யுள்ள சிங்களத் தீவிற்குச் சென்றான்; சென்றவன் சென்றவன்தான்; திரும்பி வரவில்லை. இடையில் 15 ஆண்டு பறந்தது.

பருவம் எய்தினள் மகள். அதனால், வரவர குடும்பத்தின் கவலை வளர்ந்தது,

என் மகள் கதியிதுவோ? இது புலவர் தேவியின் புலம்பல்.

உன் விதி யிப்படியோ மகனே! எங்கிருக்கின்றாயோ நீ என்று அலறுகின்றாள் தங்கை. இவர்கள் இடையிடை யிப்படி யெழுப்புகின்ற குரல் கேட்டு, மகளின் சிந்தனை குழம்பியது; சிதறியது உணர்வு.

ஒருநாள்

வெளியில் சென்றிருந்த புலவர் வீடு திரும்பினார், தங்கையும் தாரமும் கதறுவதைக் கண்டார்; திடுக்கிட்டார். என்ன இது! வர அவனுக்கு வழி தெரியும்! சும்மா இருங்கள் என்று அதட்டினார்.

நெஞ்சில் கிடத்தி வளர்த்த மகன்—கண்ணில்
நித்திரை நீக்கி நான் காத்த பிள்ளை
விஞ்சு தவத்தினில் பெற்றேனே—என்னை
விட்டுப் பிரிந்து மறைந்தானே! அண்ணு அ அ அ

என்று அலறியழுதாள் உடன்பிறந்தாள்.

பெற்ற வயிறு துடிக்கிறதே—எந்தன்
பெண்முகம் பார்க்கச் சகிக்கலையே

இடையில் புலித்தோ லிருந்தநலம் பாரேனோ
விடையி லெழுந்தருளும் வெற்றியினைப் பாரேனோ.

உற்றமகள் முகம் காணும் போதே—எந்தன்
உள்ளம் இடிந்து சரியுதையா! அ அ அ

என்று ஓலமிடுகிறாள் மனைவி.

இருவரையும் தேற்றுவது எப்படி? திகைக்கும் கவிஞர்க்கு, அடுத்த அறையில் தேம்பும் சத்தம் கேட்டது.

அங்கே யார் என்று பார்க்க அறையுள் நுழைந்தார். மாலை மாலையாகக் கண்ணீர் வடிக்கும் மகளைக் கண்டார்.

என்ன அம்மா இது! அறிவிலாத அவர்களைப்போல, நீயுமா அழுகிறாய் என்று கேட்க வாய் திறந்தார்.

தந்தையைக் கண்டதும், அப்பா! அப்பா என்று எழுந்த மகள், நின்றபடியே நிலம் சாய்ந்தாள்.

ஓடி வந்து, உணர்விழந்த குமாரியை வாரியெடுத்து மடியில் கிடத்தினார். குளிர்ந்த நீர்! விசிறி! கொண்டு வாருங்கள் என்று கூவினார். தங்கையும் மனைவியும், தண்ணீரும் விசிறியும் கண்ணீருமாய் வந்தனர். அனைவரும் சேர்ந்து செய்த முயற்சியால், மகளின் கண்கள் மலர்ந்தன. அதன்பின் சிறிது ஆறுதல் வெளினும், கண்ணீரும் கம்பலையுமாக அன்றைய பொழுது கழிந்தது. கலங்காத கவிஞர் மனமும் கலங்கியது. சண்முகப் பரமன் தாள்களே தஞ்சம் என்று இதுவரை யெண்ணியிருந்த எண்ணம், முன் வந்து நின்றது.

முறையீடு

அஞ்ச வேண்டா! ஆறுமுகம் துணையுண்டு. விரைந்து புறப்படுங்கள் திருச்செந்தூர்க்கு என்று விறிட்டுக் கூவினார்.

மனைவியும் தங்கையும் மகளும் தொடர, புறப்பட்டார். அருள் சிந்தித்த மனத்தோடு செந்திற்பதி வந்தார். சந்நிதியில் நின்றார்.

நித்திய அபிஷேக நேரம். அதனால், இறைவனை மறைக்கின்றது திரை. வந்த நேரத்தில் சேவை வாய்த்திலது என்று வருந்தியது மனம்; பெருகியது கண்ணீர்.

கடல்நீரு மாறும்போற் கலந்துறைக் காணேண்டி
உடலு முயிருபோல் உட்கலந்து நின்றுண்டி.

வேலுக்கும் சொல்லி மயிலுக்கும் சொல்லிநின் வீரகண்டைக்
காலுக்கும் சொல்லி அபயமிட்டேன்; கருங்குறப்பெண்
பாலுக்கும் சொல்லி அழுதுவிட்டேன்; முகம் பார்க்கிலனே !
மாலுக்குச் சொல்லிய மால்யானை போல மகிழ்வதற்கே

[மாலுக்குச் சொல்லிய - திருமாலே ஆதிமூலமே என விளித்து முறையிட்ட; அல்லது, மால் உக்கு சொல்லிய - (உணர்வின்) மயக்கம் ஒழிந்து முறையிட்ட. யானை - கஜேந்திரன்.]

வருந்திய வருத்தம், இப்பாட்டுருவம் கொண்டது. பாட்டிற்கு இரங்கியது பரமன் அருள். படீரெனத் திரை யறுந்தது. கந்தப் பரமன் காட்சியாயினன். கைகூப்பி, இன்பக் கண்ணீர் பெருக்கினர் கவிஞர்.

வருவன் மருகன்; வருந்தல் விடு; மந்திர நகர் செல் என்றது அசரீரி. அந்த அருள் நாதம் தன் உள்ளத்தை மட்டும் தொட்டது; பிறர் அறியார். அதே நேரத்தில், திருவருட் பிரசாதமாக, இளந் திருநீறும் கிடைத்தது. திரை விழச் செய்த கவிஞரை, வியந்து தொடு உபசரித்தனர் கோயில் நிர்வாகிகள். மகிழ்ந்தது மனம்; அதன் பின் அமுது கொண்டனர் அனைவரும்.

திருவருள் ஏற்பாடு இனி ஆரம்பமாகும். இனி நாம் வருந்த வேண்டா. புறப்படுங்கள் என்று கூறி, குடும்பத்தோடு ஊர் வந்து சேர்ந்தார்.

என்ன பாண்டியரே ! மருகன் இருக்குமிடம் தெரிந்ததா என்று வினவினர் பலர். திருச்செந்தூரானிடம் விண்ணப்பித்திருக்கிறேன் என்பது கவிஞர் பதில். நம்பினவர் கைகுவித்தார்; நம்பாதார் எள்ளல் நகை செய்தனர்.

கடவுள் காப்பு

புலவர் இருக்கிறரா அம்மா என்று தலைவாயிலில் ஒரு குரல்.

எண்ணிறந்த சென்ம மெடுத்துச் சிவபூசை
பண்ணிப் பிழையாமற் பதியிழந்து கெட்டேனே.

வெளியில் போயிருக்கிறார் ; வருகிற நேரந்தான் ; என்ன வேண்டும் என்று வினவியபடி வெளிவந்த புலவர் மனைவியார், கட்டழகுடைய காளை யொருவன், மிடுக்கொடு நிற்பதைக் கண்டார்.

யார் அப்பா நீ!

என் பெயர் வீரன். உள்ளறையில் கட்டித் தயிர் உறியில் உளது; கட்டுச் சாதம் தயாரித்து விரைந்து கொடுங்கள்! காளைத் தனமாகப் பிரிந்து குடும்பத்திற்குக் கவலை யளித்த மருகனைக் கொணர, கடல் மேல் பிரயாணம் செய வேண்டும்; இது, புலவர் பல நாளாக செய்துள வேண்டுகை எனறு துரிதப் படுத்துகிறான் வந்தவன்.

அப்படியா! என் வயிற்றில் பால் வார்த்ததுபோல் இருக்கிறது இந்த வார்த்தை. இதோ சித்தப் படுத்துகிறேன் தம்பி என்றுஉள் நுழைந்தாள் அந்த அம்மை.

இச்செய்தி யறிந்த கவிஞர் தங்கை, வெளி வந்தாள்.

அப்பா! உனக்குப் பெரும் புண்ணியம்! எப்படி யாயினும் என் மகனைக் கொண்டு வர வேண்டும்; உன் பேர் என்ன தம்பி !

என் பெயர் வாகு அம்மா !

நல்ல பெயர். திண்ணையில் இரு தம்பி; இதோ வருகிறேன் என்று உள் நுழைந்தாள்.

செய்தி யறிந்த மகள் வெளி வந்தாள். நீங்கள்தானே கடல் மேல் செல்லப் போவது?

ஆம் அம்மா!

தங்கள் பெயர் ?

என் பெயர் தேவர்.

இதற்குள் கட்டுச் சாதம் கைக்கு வந்தது. வார்த்தை யொன்றும் பேசாமல், விறுவிறு என்று காளை விரைந்தான். கண்ணிற் கெட்டிய தூரம் பார்த்து, ஒரு வார்த்தையும் சொல்

தன்னுடம்பு தானே தனக்குப் பகையாமென்

றென்றுமுணர் வில்லாம லின்பமென்று மாண்டேனே.

லாமல் சென்றனே என்று, ஒவ்வொரு மனமும் ஒவ்வொரு வகையாகப் படபடக்கிறது. கண்டுவரும்; இல்லை கொண்டுவரும்; திருவருள் தீர்ப்பு எப்படியோ என்றெல்லாம் காளை விஷயமாக ஊசலாடுகின்றன அம் மூன்று உள்ளங்களும்.

புலவர் வந்தார். நடந்தது கூறினள் தேவி.

நான் சொன்னேன் என்று கூறினன். அவன் பெயரை விசாரித்தாயா என்றார் வீரபாண்டியர்.

வீரன் அவன் பெயர் என்றாள் மனைவி.

இல்லை, அவன் பெயர் வாகு என்றாள் தங்கை.

இல்லை யில்லை; தேவர் அவர் பெயர் என்றான் மகன்.

இங்ஙனம் மூவரும், தாம் வினவி அறிந்ததையே திருப்பித் திருப்பி அறிவித்தனர்.

கவிஞர்க்குச் சிந்தனை கனத்தது. வீரன், வாகு, தேவர்; ஓஹோ அப்படியா செய்தி! செந்திலாதிபா! செங்கோட்டிறைவா! உனதருள் விலாசமா இது! என்று இன்பக் கண்ணீர் சிந்தினார்.

வந்தவர் வீரவாகுதேவர். அவரைத் தரிசிக்கும் பேறு உங்கட்கு வாய்த்துளது; நீங்கள் செய்துள புண்ணியமே புண்ணியம் என்று புளகித்துப் பாராட்டினர்; தேவர் சென்ற திசையை நால்வரும் நோக்கினர்.

ஓரே ஜோதி வெள்ளம் தெரிகிறது; அது, நெடுந்தூரம் சென்று மறைந்தது; நால்வரும் கைகுவித்துத் தொழுதனர்.

நல்ல செய்தி

சிங்கனத்தில் மருகன். அவன் எதிரில், வீரவாகுதேவர் நிற்கிறார்.

என்ன தம்பி இது! மனைவியும் தாயும் மயங்க, மாமனும் மாமியும் அங்கு வருந்த, உல்லாசமாக இங்கு உலாவுகின்றாயே!

மருகன் இது கேட்டு மனம் மறுகினன். ஐயா! தாங்கள் யாரோ அறியேன். வணிகருடன் இங்கு வந்தேன். ஆண்டுகள்

• குருமார்க்க மில்லாக் குருடருடன் கூடிக்
கருமார்க்கத் துன்னே கருத்தழிந்து கெட்டேனே.

பல ஆயின. கப்பலேறக் காசுமில்லை; கண் கலங்கிய வாழ்க்கை தான்.

காசில்லை யென்ற கவலை வேண்டாம். இப்போதே புறப்படு. குடும்பத்தில் உன்னைக் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்; கப்பலும் புறப்படு நேரம் என்று மருகனை யழைத்துச் சென்றார். இருவரும் கப்பல் ஏறினர்.

என்ன வியப்பு! அடுத்த கணத்தில் தூத்துக்குடி; கவிஞர் மாளிகை வாயிலில் இருவரும் நிற்கின்றனர்; விண்ணப்பம் நிறைவேறியது என்று உன் மாமனுக்குச் சொல்! எனக்கு முதலாளி கட்டளை பலவுளது; வருகிறேன் என்று போக்குக் காட்டி காளை மறைந்தான்.

வியந்து நிற்கிறான் மருகன். தலைவாயிலில் மகன் நிற்பதைத் தாய் அறிந்தாள். ஓடி வந்தாள். இப்படி எங்களை மறந்து எங்கேயடா போயிருந்தாய் நீ என்று கண்ணீர்ப் பெருக்கிக் கதறினள்.

உள்ளிருந்து குரல் கேட்டு ஓடி வந்தார் கவிஞர். மருகனை வீட்டுள் அழைத்துச் சென்றார். மனைவியும் மகளும் சூழ்ந்தனர்; வார்த்தை பல வளர்ந்தது.

கனவா நான் காண்பது? நனவுதானா என்கிறான் மருகன். காளை வந்தான்; அழைத்தான்; என்னோடு கப்பலேறினான்; அதே கணத்தில் இங்கு இருவரும் வந்து இருக்கிறோம்; வருகிறேன் என்று காளை மறைகிறான்; என்ன இது? ஒன்றும் விளங்க வில்லையே?

திருச்செந்திலான் ஆடல் பல; அவற்றுள் ஒன்று இது என்று விளக்கம் கூறினர் புலவர். அது கேட்டு உடலெலாம் புளகிக்க, திருச்செந்தில் திசை நோக்கி, அன்புக் கண்ணீர் பெருக்கித் தொழுதனர் அனைவரும்

கண்காட்டும் வேசியர்தங் கண்வலையிற் சிக்கியிக
அங்காடி நாய்போ லலைந்துலைந்தேயே நெஞ்சமே.

சாந்தி

மருகனும் மகளும் இன்ப வெள்ளத்தில் மிதந்தனர். தங்கையும் மனைவியும் தளர்ச்சி யகன்றனர். நாள் பல இங்ஙனம் நடந்தது.

வீரபாண்டியர்க்கு மோன ஞானம் முதிர்ந்தது, வீரவாகு தேவர்மூலம், தம் துயரகற்றிய தயாமூல தர்மத்தை நினைந்தார்; நெஞ்சம் நெகிழ்ந்தது. பக்தி பரவசத்தோடு அவர் பாடிய திருச்செந்தில் பாடல் பல பாடியபடியே, பரமன் அருள் நிழல் அடியில், பாவலர் உயிர் படர்ந்தது.

பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்; பரத்தில் மறைந்தது பாண்டியர் ஆன்மா என்று, இவ் வரலாற்றை இன்றும் கூறுகின்றது உலகம்.

தியாகம்

K. S. சுந்தரமூர்த்தி

அன்றுடன் போர் தொடங்கி நாள் பதினேழு ஆகின்றது. அனுமக் கொடியோனாகிய விஜயனுக்கும், சூரிய குல தோன்றலான கர்ணனுக்கும் கடுமையான போர் நடக்கிறது. யார் பக்கம் தோல்வி யார் பக்கம் வெற்றி யென்று நிச்சயிக்க முடியவில்லை. திக்கெட்டும் அதிரும்படியாக, நிலமகள் நடுங்கும்படியாக, இருவரும் நெடுநேரம் கடும்போர் செய்கின்றனர். காண்டீபனுடைய ஒவ்வொரு அம்பும், கணத்துக்குக் கணம் கர்ணனுடைய மார்பில் ஊடுருவித் துளைத்துச் சென்று சித்ரவதை செய்கிறது. அர்ச்சுனனுடைய அம்பின் வேகத்தைத் தாங்க மாட்டாமல், எந்தெந்த உலகங்களிலும் தருமத்திலே தனக்கெதிரில்லாத ஒப்பற்ற சுத்த வீரனான கர்ணன்,

---

இப்பாழாம் வாழ்வைநம்பி யேற்றவர்க்கொன் றீயாமல்
துப்பாழாய் வந்தவினை சூழ்ந்ததுவே நெஞ்சமே.

தன்னுடைய சரீர முழுதும் சூரியனுடைய கரங்கள் போன்று பாணங்கள் நிறைந்திருக்க, கிரீடமும், கவச குண்டலமும் தோற்று, முடியில் தன் கையிலே பிடித்த வில்லுடன் பார்த்திபன் மீது தொடுத்த பாணத்தோடு தேர்த் தட்டிலே சாய்ந்தான்.

இதைப் பார்க்கச் சகியாத இரவியானவன், மேற்குத் திசையை நோக்கி அதிவேகமாக சென்று கொண்டிருந் தான். இன்னும் பொழுது அடங்க கொஞ்ச நேரம் தான் இருக்கிறது. இதற்குள், பக்தர் பரவும் பரந்தாமன், முத்தர் போற்றும் முதல்வன், நான் மறையின் பொரு ளாகிய சர்வேஸ்வரன், வேதக் கொழுந்தாகிய கண்ணன், காண்டீபனுடைய அம்பானது கர்னனை ஒன்றும் செய்யாமல் தருமதேவதைகள் அவனுக்கு துணையிருக்கக் கண்டு, சித்திரத்தை யொத்த அழகிய வில்லினையுடைய விஜயனைப் பார்த்து, கர்னன் மீது மேலும் மேலும் பாணங் கள் விடாதவாறு நிறுத்தும்படியாகக் கையமர்த்தி, தான் தேரை விட்டுக் கீழ் இறங்கி, உண்மையான தவத்திற் சிறந்த வேதிய வேடந்தாங்கி, சூரியனின் குமாரனாகிய கர்னனை நோக்கி விரைந்தார்.

தளர்ந்த வயது ஓடிய வெள்ளைப் பாவை போன்ற தலைமலர்; கையிலே தடி; குழிவிழுந்த கண்கள்; உலர்ந்த உதடு; குவிந்த முகம்; தள்ளாடி தள்ளாடிச் சென்ற அந் தக் கிழ உருவம் கர்னனை நோக்கி, கர்ணா! அலையெறிந்து ஒதுங்குகின்ற ஆழி சூழ்ந்த இந்த அவனியில், ‘இல்லை யென்று இரந்த வறிஞர்களுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்து, பானுவைக் கண்ட பனிபோல் அவர்களுடைய

பொன்னு மணியுமெழிற் பூவையரும் வாழ்வுமிவை
இன்னும் சதமாக வெண்ணினையே நெஞ்சமே.

வறுமையை ஓட்டுவதாக, மகமேருவரையின் பருவதத்தின் கண்ணே தவம்புரிந்த யான் கேள்வியுற்றேன். கர்ண! அந்த நீள் வறுமையால் பெருந்துயருற்றேன். ஆதலால் 'சப்தமா' வென்னும் குதிரை (புரவி)யை நடத்துகின்ற தபனனுடைய செல்வனே! நீ உன்னுடைய கையில் உள்ள பொருளைக் கொடுத்து, என்னுடைய வறுமைபோக உதவி புரிவாயாக என்று வேண்டிய அவ்விருத்த வேதியரின் வாக்கியங்களை, தன்னுடைய இரு செவிக்கும் அமுதெனக் கேட்டு, நல்லது! நல்லது! என நகைத்து, நான் இப்பொழுது தரத் தகுந்த பொருளை நவிலுக வென்று, காண்டீபனுடைய வெங்கணைகளினால் அடிபட்டு மெய் தளர்ந்து வீழ்ந்த கர்ணன் வினவ, நான் மறைப் பொருளாகிய மாயோன், கர்ண! நீ இது நாள் வரையில் செய்து வந்த தருமமனைத்தும் எனக்கு தருகவென்று வேண்டினர். அங்ஙனம் கூறிய மறைக் கெட்டாத மாதவனை நோக்கி,

அன்பிற்குகந்த வேதியரே! என்னுடைய உயிரானது இந்த சடலத்தை விட்டு நீங்கி விட்டதோ, அல்லது இருக்கிறதோ நான் அதை உணர சக்தியற்றவனாய் இருக்கிறேன். பாவியாகிய நான், இடைவிடாது வேண்டுவோர்க்கு வேண்டிய பொருளை உதவிய அந்த தக்க சமயத்தில் நீர் வரவில்லையே! ஆயினும் இந்த படுகளத்தில், 'இல்லை' யென்று சொல்லாமல் நான் தரக்கூடிய பொருளான இந்த தருமம் அனைத்தும் உங்களுக்கு உதவினேன். செந்தாமரை மலரில் வாழக்கூடிய விதியானவனும் உங்களுக்கு நிகரில்லையென்றால், இந்த புண்ணியம் அதனினும் பெரிதோ என்று, தன்னிரு கரங்

அற்றவர்க்கு மீயாம லரன்பூசை யோராமல்
கற்றவர்க்கு மீயாமற் கண்மறைந்து விட்டனையே.

குனித்து வணங்கி நின்ற கர்னனை நோக்கி, மகிழ்ச்சி
பொருந்திய மனத்தோடு, கர்னு! நீ செய்த தருமம்
அனைத்தும் எனக்கு உதவுவதாக சொல்லினை நல்லது.
இப்படி வாயினல் சொன்னல் நான் ஒப்புக்கொள்ள
மாட்டேன். எனக்கு நீ கைப்புனலுடன் தாரை வார்த்துத்
தருவாயாக என்று, மகாபலிச் சக்கரவர்த்தியிடம்
அன்றுகுள்ள பிராமண வடிவந்தாங்கிச் சென்று மூவடி
மண் இரந்து, முடிவில் மூவுலகையும் உடன் கவர்ந்தோன்
கேட்க, அவ்வாறே கர்னனவன், தன்னுடைய பாணங்
களினின்றும் ஒன்றைப் பிடுங்கி,அதனின் வழியாக பீறிட்டு
வருகின்ற குருதியைக் கையிலேந்தி, அதை அவ்வேதியரின்
கரத்திலே தாரை வார்த்து, தான் செய்த தருமமனைத்தும்
'தியாகம்";செய்தான்.

அவ்வாறு கொடுக்கப் பெற்ற அவ்வேதியர் உளம்
மகிழ்ந்து, கர்னு! நீ தந்த தருமமனைத்தும் பெற்றுக்கொண்
டேன். மகிழ்ச்சி. உனக்கு ஏதாவது வரங்கள் வேண்டுமா
யின் சொல்லுக; தருகிறேன் என்று தானகவே உரைத்
தார். அங்ஙனம் கூறியருளிய வேதியரை நோக்கி, கர்ன
னவன், சுவாமி! இப்பிறப்பில் நான் செய்து வந்த நல்
வினை, தீவினைகளினல் இனியும் தொடர்ந்து தாய் வயிற்
றில் பிறந்து விடுவேனேயானல்,அந்தந்தப் பிறப்பிலே என்
னிடம் வந்து 'இல்லை'யென்று சொல்லி யாசிப்பவர்க
ளுக்கு நான் 'இல்லை'யென்று சொல்லாத அந்த நல்ல
'மனத்தை' எனக்குத் தருவாயாக என்று வேண்டிய
தன்னுடைய மைத்துனன கர்னன் உரைத்த வாக்கியங்க
ளைக் கேட்ட கண்ணனவர், மனமலர்ச்சி கொண்டு

சந்திரனை மேகமது தான் மறைத்த வாறதுபோற்
பந்தமுற யானுமுனைப் பார்க்கிலேன் பூரணமே.

தன்னுடைய மலர்போன்ற இரு கரங்களினாலும் கர்ணனை மார்போடு கட்டித் தழுவி, ஆனந்தக் கண்ணீர் வடித்து, அதனால் கர்ணனுடைய திருமேனி முழுதும் நனைந்து, எத்தனை பிறவியெடுக்கினும் அந்தந்தப் பிறவிகளில், வருவோர்க்கு வரையாது மழை கொடுக்கும் வானம்போல், நீயும் வறியோர்க்கு வரையாது கொடுக்க நல் மனமும், அதற்குகந்த செல்வங்களையும் அடைந்து; முடிவில் முத்தர்கள் நாடுகின்ற முத்தியும் பெறுகவென்று மூவரும் ஒருவனான மூர்த்தி அருளினார்.

இதோடு நில்லாத கண்ணனானவர், சூரியன் மகனான கர்ணனுடைய கண்கள் கண்டு களிக்குமாறு தம்முடைய சதுர்புஜங்களும், அந்த சதுர் புஜங்களிலே பஞ்சாயுதம் விளங்க, யமனையொத்த முதலையின் வாயில் அகப்பட்ட குஞ்சரம் ' ஆதிமூலம் ' என்றழைக்க, அன்று அக்கரி முன் தோன்றி காத்தருளிய கரியவர், இன்று கர்ணன் முன்பு தோன்றினர். தோன்றிய முதல்வனை, தேவர்களும் தேவ யோகிகளும், தேவேந்திரனும், பிரமனும், சப்தரிஷிகளும் கண்டு பொன் மலர்களை தூவி அஞ்சலி செய்து நின்றனர். கர்ணன், விண்மாரியெனக் கண்மாரி பெய்து ஆனந்தமேலிட்டு, தேவதேவனே ! தீனதயாளரே ! அடியார் நினைத்தபடி அவர்கள் முன் தோன்றி அருளுகின்ற ஆதி முதல்வனே ! இந்தப் படுகளத்திலே தனஞ்சயனுடைய அம்பினால் அடிபட்டு கீழே தேர்த் தட்டில் வீழவும், அதனால் காரணனான உன்னைக் காணவும் பெற்றேன். இனியெனக்கு பெறத் தகுந்தது இங்கு ஒன்றும் இல்லை. பெரும்

செந்தா மரைத்தாளைத் தினந்தினமும் போற்றுமல்
அந்தரமாய் நின்றங் கலைந்தேனுன் பூரணமே.

பேறுபெற்றேன் என்று உவகைகொண்டு, அந்த விஸ்வ மூர்த்தியின் திருவடியில் வீழ்ந்து வணங்கி நின்றான்.

முடிவில் வரத்தையளித்த கண்ணன் விஜயனுடைய தேர்மீது ஏறி, அவனை, கர்ணன் மீது மீண்டும் பாணம் ஆதவன் மறைவதற்குள் விடுக்குமாறு பணித்தார். அவ்வாறே விஜயனும் தியாக செல்வனை கர்ணன் மீது அம்பைத்தொடுக்க, அது கர்னனுடைய உயிரைக் குடித்துச் சென்றது. சூரிய குல தோன்றல் தியாகத்திற்காக பிறந்து வளர்ந்து, முடிவில் அதற்காகவே தன்னை ஈந்தனன். கர்னனுடைய பூதவுடல் மறைந்தாலும், அவனது புகழுடல் இந்நிலவுலகம் உள்ளவரையில் நின்று நிலவும் படியாக அவனுக்கு 'தியாகம்' வழி காட்டியது. அதோடு வள்ளுவர் வரைந்து சென்ற 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற குறள், தியாக செல்வனை கர்னனைப் பார்த்துத்தான் எழுந்தது போலும்!

மனசாட்சி

(V. G. R.)

நம் மனசாட்சியே ஒரு நீதி ஸ்தலம். அதை மானிடராகப் பிறந்த நம்மனைவருக்கும், மற்ற ஜீவராசிகளை விட மேன்மையுற்று வாழ்வதற்காக திருக்குமரன் அளித்திருக்கிறார். நாம் அதை மதித்து அதன் தீர்ப்புப்படி ஆதி முதல் நடக்கப் பழகி வந்தால், நம் வாழ்நாளில் துக்கமோ, தோல்வியோ ஏற்படாது. வேறு கோர்ட்டுகளுக்குப் போக வேண்டிய அவசியமே இராது. நித்தியானந்தத்தை இவ்வுலகிலேயே அநுபவிக்கலாம்.

மெய்யுணர்ந்து பாராமல் விரிந்தகன்று போகாதே
அய்யன் திருவினை யாட்டேன் றறிநெஞ்சே

ஆனால், நாம் அந்த வழி செல்லவில்லை. துர்க்குணம் நிரம்பிய மனம் விரும்பியபடி, ஐம்புலன்கள் வழியே செல்வதில் ஆசையும் மோகமும் கொண்டு, நம் இதயத்தில் ஒளிரும் மனசாக்ஷியெனும் நீதி மன்றத்தின் புத்திமதிகளை மதியாமல், மனம் போன போக்கில் செல்ல ஆசை கொண்டோம். நாளடைவில் அந்த மனசாக்ஷியாகிய நீதிஸ்தலத்தைப் பாழடையச் செய்து மூடிவிட்டோம். இப்பொழுது நம் மனதே ராஜா! ஐம்புலன் வழி சென்று ஆசைக் கொழுப்பேறி யிருக்கும் ஆணவமே மந்திரி!

இந்நிலையினால் நாம் என்ன சுகத்தை யடைந்து விட்டோம்? ஒன்றுமில்லை. சரீரத்தில் வாலிபத்தால் ஏற்படும் வலிமை குறையக் குறைய நமக்கு மனதில் சஞ்சலம்தான் மிஞ்சுகிறது. எதிலும் அருவருப்பும், மனோ வியாதியும், சரீர வியாதியும் ஏக காலத்தில் நம்மைப் பிடிக்க ஆரம்பிக்கின்றன. ஆறுதலோ, அமைதியோ யின்றித் தவிக்கிறோம். நாம் ஆதி முதல் நம் மனசாக்ஷியை மதித்து நடந்திருந்தோமாயின், நமக்கு மனோ வியாதி என்பதே ஏற்பட்டிராது. மனோ வியாதி யில்லாதவனுக்கு சரீர வியாதி அணுகாது. என்றும் சுக ஜீவியாய் வாழ்ந்திருக்கலாம். எங்கும் அன்பு மயமாய் ஒளிரும். அயலார் யாவரும் நம் பந்துக்களாகி நமக்குத் துணைபுரியா நிற்பர். இப்பொழுது நம் கதியோ, நிர்க்கதியாய் திரிசங்கு சொர்க்கமாய் விட்டதே! என்ன செய்வோம்! இதற்கு விமோசனமே இல்லையா?

உண்டு! நிச்சயமாய் உண்டு! சொல்கிறேன்; கவனமாய்க் கேள்! நீர் வளமும், நில வளமும் நிறைந்த நம்

.பாக்கியத்தைக் கண்டு பரிந்து மகிழாதே
தாக்குமிடி வந்தால் சலியாதே.

பாரத நாட்டில், புனித ஸ்தலங்களாகிய குன்றங்கள் நிறைந்த பதியெங்கிலும் நமக்கு நீதியும் நன்மையும் வழங்கும் நீதி மன்றங்கள் உண்டு. அதிலும் மிகச் சிறப்பு வாய்ந்த நம் தமிழ் நாட்டின்கண் உள்ள மக்கள் யாவரும் தம் குறைகளைத் தெரிவித்து நலமுறும் வண்ணம், ஆறு உயர்ந்த ஞான சிகரமாகிய குன்றங்களின் மேல், மிகவும் எழில் வாய்ந்ததாயும், என்றும் அழியாததாயுமுள்ள ஆறு நியாய ஸ்தலங்கள் இருக்கின்றன. அவைகளில் ஆறுமுகங்களும், பன்னிரு தோள்களும், பச்சை மயிலும், வெற்றி வேலும், சேவற் கொடியும் கொண்ட திருக்குமரன், வற்றாத கருணைக் கடலாய் அருள் ஞான பீடத்தில் கொலுவீற்றிருந்து பரிபாலித்து வருகிறார்! எவரெவர் எக்குறைகளை விண்ணப்பித்து மனுச் செய்தாலும், அவரவர் குறைகளைக் காலதாமதமின்றி, அக்கணமே கவனித்து அவர்கள் இன்னல் நீக்கி இன்புறச் செய்கிறார். மூவாசைப் பிணக்கால் நாம் மனுச் செய்து கொள்ளும் நாடெங்கும் நிறைந்துள்ள கோர்ட்டுகளில், நம் மனுவை விசாரிப்பதை எண்ணிலடங்கா வாய்தாக்கள் போட்டுக் காலதாமதம் செய்வது போல, திருக்குமரன் கோர்ட்டில் கிடையாது! ஏழை, பணக்காரன் எனும் வித்தியாசம் கிடையாது! பணச் செலவோ, அலைச்சலோ, சாக்ஷிக்காரன் காலில் விழ வேண்டியதோ இல்லை. அவர் நியாய ஸ்தலத்தில் சேவகர்கள் உபத்திரவம் கிடையாது. யாதொரு தடங்கலுமின்றி எச்சமயத்தும் திருக்குமரன் அருகில் போய் நம் குறைகளைத் தெரிவிக்கலாம். அவர் உடனே அதைக் கவனித்து நாம் வேண்டியதைக் கொடுப்பார்.

பார்த்தவிடமெல்லாம் பரமென்றிரு மனமே
காற்றனல் மண் நீர் வெளியாம் கண்டதெல்லாம்.

ஆஹா! அப்படியா! மிகவும் சந்தோஷம்! இப்பொழுதே போய் விண்ணப்பித்துக் கொள்கிறேன். ஆனால் ஒரு சந்தேகமும் கவலையும் வந்துவிட்டதே! என்ன செய்வேன்! நான் திருக்குமரன் கோர்ட்டில் போய் என்ன மனுப் போடுவது? என்ன குறையென்று சொல்வது? யார் நமக்குத் தீங்கு செய்தார்கள் என்று சொல்வது? நமக்கு இன்று வந்துள்ள கவலைக்கும், கஷ்டத்திற்கும், வியாதிக்கும், தரித்திரத்திற்கும் யார் பொறுப்பாளி? யார் பேரில் பழியைச் சுமத்தி மனுப் போடுவது? ஒருவரும் நமக்குத் தீங்கு செய்யவில்லை. நமக்கு வந்த கஷ்டங்கள் யாவற்றிற்கும் நாம் தானே பொறுப்பாளி! இதில் சந்தேகமில்லை! என் மனசாக்ஷியே சொல்கிறதே! ஆஹா! நான் என்ன செய்வேன்! திருக்குமரன் முன்போய் என் குற்றங்களை நானே ஒப்புக்கொண்டு சரணடைந்து மன்னிப்புப் பெறுவதைவிடவேறு வழியில்லை. அதுதான் நல்லது! நான் அங்குபோய் முதலில் என்ன சொல்வது? அவரை துதி செய்து நாலு வார்த்தைகள்கூட எனக்கு சொல்லத் தெரியாதே; இதுவரை வணங்கா மூடியாய் இருந்த நான், அங்கு போய் எப்படி குற்றமற்ற வணக்கம் செய்வேன்!

இதமும் பணிவும் இன்னதென் றறியாத நான், அங்கு எப்படி பணிவாயும், இதமாகவும் பேசுவேன்! எனக்கு அதை நினைக்கும் பொழுதே நடுங்குகிறதே! நான் இத்தனை நாள் அவப்பொழுது போக்கிய பிழையெல்லாம் எனது மனக்கண் முன் நிற்கிறதே! எனக்கொன்றும் தோன்றவில்லையே!

கரும்புதனைத் தின்றுஎன்றே தெரியும் தெஞ்சே
ஐம்புலனை வென்றுஎன்றே வெளிச்சமதாம்.

மனமே! நீ கலங்காதே! உன் கவலை தீர வழி சொல்கிறேன். கேள்! சில காலத்திற்கு முன் ஞான வள்ளலாகிய அருணகிரியெனும் ஒரு அருள் நீதிமன்ற வழக்கறிஞர் இருந்தார். அவர் திருக்குமரனிடம் மிகவும் நெருங்கிப் பழகியவர். அவர் ஆதியில் நம்மைப்போல் மிகவும் கஷ்டப்பட்டு, பிறகு திருமுருகன் நியாய ஸ்தலத்தில் மிகவும் மன்றாடி வெற்றி பெற்றவர். அவர் தம்மைப் போல் அல்லலுறும் எளியோர்களுக்கு உற்ற துணையாய் விளங்கும் வண்ணம் அநேக மனுக்களை சந்தக்கவி ரூபத்தில் அருளியிருக்கிறார்! திருக்குமரன் உறைவிடமான ஆறு நீதி ஸ்தலத்துக்கும் பொருத்தமான அநேக மனுக்களை திருப்புகழ் ரூபமாய் அமைத்திருக்கிறார். பாலர், விருத்தர், அறிஞர், கல்லாதோர் யாவரும் எளிதில் உணரும் வண்ணம் வெவ்வேறு ரூபத்தில் செய்திருக்கிறார்.

திருப்புகழானது, தேனிலும், பாலிலும் மிக இனிமையானது. நமக்குள்ள குறைகளையும், அது நீங்குவதற்கு நாம் குமரனிடம் வேண்டிக்கொள்ளும் வழியும் அதிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. நாம் ஒரு சிரமமும் படவேண்டாம். பிழையின்றி அதை நன்கு பாடம் பண்ணி, அதன் கருத்தை யறிந்து உளங்கனிந்துபாடினாலேபோதும். உள்ளம் இனிக்கும்! ஹிருதயம் பூரிக்கும்! நம் மனசாக்ஷி எனும் மன்றம் மறுபடி திறக்க ஆரம்பிக்கும்! கவலைகள் குறைய ஆரம்பிக்கும்! தைரியமும், நன்னம்பிக்கையும் பிறக்கும்! நாம் பாடம் பண்ணும் திருப்புகழ்களின் எண்ணிக்கை ஏற ஏற, கல்வியறிவும், சத்துவ குணமும், வாக்கு வன்மையும் உண்டாகும். நேரே திருக்குமரன் சன்னி

உகந்துகந்து நெஞ்சமே ஓரெழுத்தி னாலே
அகந்தனையே சுத்திபண்ணி யாய்ந்திருந் வாழ்வாயே.

திக்குப் போய் நம் குறைகளை திருப்புகழ் மூலமாய்த் தெரிவிக்க வேணுமென ஆர்வம் பிறக்கும். அன்புசுரக்கும். அருள் பெருக்கும். ஆனந்தமும், நிம்மதியும் உண்டாகும்.

ஆஹா ! அப்படியா ! இன்றிருந்தே திருக்குமரன் திருப்புகழைக் கற்று, அவர் சன்னதியில் அன்புடன் பாடி, அனவரதமும் அவர் புகழையே நாடி, என் மனசாக்ஷியை மதித்து நடந்து, எனது சஞ்சலங்கள் நீங்கிச் சுகம் பெறுவேன் !

முருகா சரணம் முருகா சரணம்.

சேக்கிழார் செய்தது

இளவழகனார்

சேக்கிழார் செய்ததை திருத்தொண்டர் புராணம், அல்லது பெரிய புராணம் என்று சொல்வார்கள். இதற்கு மூலநூல் திருத்தொண்டத் தொகை என்னும் பதினொரு பாடல் அடங்கிய ஒரு திருப்பதிகம். அதனை அருளிச் செய்தவர் நம்பியாரூரர் என்னும் பெயர்பெற்ற சமய குரவர். சேக்கிழார் பெரிய புராணத்திற்கு வழிநூல் திருத்தொண்டர் திருவந்தாதி. இந்த அந்தாதியின் ஆசிரியர், திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பிகள். சேக்கிழார் நூல், இம் முறையால், சார்பு நூல் ஆகின்றது.

மூல நூலாகிய திருத்தொண்டத் தொகையின் முறைப்படியே பெரிய புராணம் அமைந்திருப்பதனால், அதன் விரிநூல் என்றே இதனைக் கூறவேண்டும். திருத்

பேசாத ஞானப் பெருமை கிடைப்பதுதான்
ஆசாபா சங்களில்லா தார்க்கலவோ பூரணமே.

தொண்டத் தொகையில் ஒவ்வோர் அடியாருடைய பெயரும் சிறப்பும் சுருக்கமாக்கூறி, அவருக்குத் தாம் அடியாராம் திறத்தில் அன்பு கொள்ளும் நிலைமையை நம்பியாரூரார் புலப்படுத்தினர். பெரிய புராணம், அவ் வடியார் ஒவ்வொருவருக்கும் ஒரு புராணம் விரித்து, விளக்கி உதவுகிறது. அம்முறையில், திருத் தொண்டத் தொகையின் ஆசிரியராகிய நம்பியாரூரரது வரலாற்றையும், பெரியபுராணம் விளக்கிப் பேசும்.

சேக்கிழார் நூலுக்கு ஒவ்வோர் அடியாரும் கதைத் தலைவராய் இருந்தாலும், திருத் தொண்டத் தொகையின் ஆசிரியராகிய நம்பியாரூரரின் வரலாற்றை, நூலாசிரியர் வரலாறு கூறும் முறையிலே மட்டுமன்றி, தமது பெரிய புராண நூலின் கதைத் தலைவர் வரலாறு கூறும் முறைமையிலும் வைத்து, ஆசிரியர் விளக்கிச் செல்கின்றார். அந் நிலையில், மற்ற அடியார்களின் வரலாறு, கிளை வரலாறுகள் போலப் பெரிய புராணத்தில் அமைந்துள்ளன. எனவே, முதன்மை வரலாறு நம்பியாரூரரது வரலாறேயாம். அது, நூலின் முதலிலும், இடையிலும், கடையிலுமாக விரித்து விளக்கி முடிக்கப்படுகிறது.

முதலில் வரும் பகுதி, தடுத்தாட் கொண்ட புராணம். நம்பியாரூரர் என்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகளை இறைவன் தடுத்து ஆட்கொண்ட உண்மை, அப் பகுதியில் பேசப் படும். தடுத்தல் என்பது வாழ்க்கையில் மயங்குதலை. ஆட்கொள்ளுதல் என்பது நல்வாழ்க்கையில் பொருந்துதலை. நம்பியாரூரருக்குத் திருமணப் பருவம் வந்தபோது, முன் தொடர்பின்படி அவர்க்கே உரிய நங்கையை அவர்

கனியிருந்த மாட்டாமல் காயருந்து மும்மனமே
கனிருசிபோ லாகுமோ காய்தான் கனிப்பாயே.

மணத்திற்குமுன், பெற்றோர் வேறொரு மாதை மணம் புணர்த்த முயன்றனர். அத் திருமணத்தால் நம்பியாரூரர்க்கு வாழ்க்கையில், மேல் மேல் ஒளி உண்டாதல் நேராது. ஆனால், இருக்கும் ஒளியும் மயங்குதற்கே இடமாகும். இது, வாழ்க்கையில் மயங்குதலாம். ஆதலால், இறைவன் அத்திருமணத்தைத் தடுத்து உதவினர்.

ஆட்கொள்ளுதல் என்பது, நம்பியாரூரது வாழ்க்கையை இறைவன் நல்லொளியில் நிறுத்தக் கருதித் தமக்கு அவரை அடியாராக்கியதும், அவரது இயல்பு நெறியாகிய யோக நெறியில் மேல் மேலும் ஊக்கித் தவநெறி அருளியதும், முன் தொடர்பின்படி அவர் மெய்யன்பிற்குரிய பரவையார் என்னும் நங்கையைத் திருமணம் கட்டியதும், தமக்கு அடியாராக்கியதோடு தம் அடியாருக்கும் அடியார் ஆகும் இயல்பை அவர்க்கு உண்டாக்கியதும், அதனால் இத்தென்னாட்டுக்கு அடியாருக்கு அடியாராகும் அன்பு மேன் மேலும் பெருகவேண்டித் திருதொண்டத் தொகை என்னும் அரிய செந்தமிழ்க் களஞ்சியத்தை அளிப்பித்ததும் ஆகும். இவையெல்லாம் இறைவன் அவரை ஆள்கொண்டதற்குரிய நிகழ்ச்சிகளாகும்.

சிலர், வாழ்க்கையில் காரியங்களைத் தடைசெய்வதில் மட்டும் சமர்த்தராய் இருப்பர். ஆனல், அப்படி தடைசெய்தபின், வேண்டும் ஆக்கங்களை உண்டாக்கிக் கொடுப்பதில் சிறிதும் வல்லமை இல்லாதவராய் இருப்பர். அதனால் என்ன பயன்? எல்லாவற்றிற்கும் மேலான தெய்வ வல்லமை என்பதும் அப்படி இருக்க முடியுமா? தவறுகளைத் தடுக்கவும் முடியும். நன்மைகளை அதற்குப்

இனிய பாலின் நீரை நீக்கி அன்னம் கொள்ளும் தன்மைபோல்
துன்பு நீக்கி யின்பமூட்டும் தூய விண்ணில் சார்வமே.

டலவாகப் பெருக்கி அளிக்கவும் முடியும். மக்கள், இந்நற் பெரும் பண்பில் மிகவும் கருத்தாய் இருக்கவேண்டும்.

மயங்கிய வாழ்க்கையை நம்பியாரூருக்கு இறைவன் தடுத்ததற்கு இரண்டு முதன்மையான காரணங்கள் உண்டு. நம்பியாரூரது யோக நெறி வளர்ச்சிக்கும், அன்பிற்கும், அடியார் பக்திக்கும் ஏற்ற வாழ்க்கைத் துணையை அவருக்குக் கூட்டுவித்தல் ஒன்று: அடியாருக்கு அடியாராதலின் வாயிலாகவே மக்கள் நல்லோராதலும், இறையருள் பெறுதலும், ஆருயிர்த் தொண்டு புரிதலும் இயலும் என்னும் உண்மையை உலகுக்கு விளக்கியுதவ நம்பியாரூரின் வாயிலாகத் திருத்தொண்டத் தொகை என்னும் அருள் மறையை அளிப்பது மற்றொன்று. திருத்தொண்டத் தொகையை உண்டாக்கித்தரும் நோக்கத்திற்காகவே, பரவை என்னும் நங்கையாரைத் திருவாரூரில் இறைவன் பிறப்பித்ததும், அத்திருவாரூர் சென்று அந்நங்கையைக் கூடி அங்கேயே வாழ்க்கை நடத்துமாறு நம்பியாரூரரை இறைவன் இயக்கியதுமாகும். காரணம், திருவாரூர்த் திருக்கோயிலிலேதான் அடியார் திருக்கூட்டம் திரளாக இருப்பது வழக்கம். அதற்காகவே அங்கே அடியார் பெருமக்கள் தங்கும் தேவாசிரிய மண்டபம் என்பது ஒன்று நிலையாக உண்டு. அடியார் திரள், திருவாரூரிலே நிலைபெற் றிருந்தமையால் முற்பிறவியில் தொடர்புடைய பரவையாரும், நம்பியாரூரரும், திருவாரூரை வந்து சேரும் நிலைமை ஏற்பட்டது.

இனி, மற்றோர் உண்மையும் இங்கே கருததற்குரியது. இறைவனுக்கு அன்பு செய்வோரும், பக்தி செய்வோரும்,

---

எங்கெங்கும் நாமே சிவமாக நாடினுல்
அங்கங்கு ஞானமொழி யமைந்து நாடு தம்மையே

பொதுவில் மனை வாழ்க்கையுடையவராய் இருப்பதே ஏற்றதாயினும், அடியார்களுக்கு அன்பு செய்வோர்க்கு அம் மனைவாழ்க்கை பின்னும் பொருத்தமானது என்று துணிதல் வேண்டும். ஏனென்றால், அடியார்க்கு அன்பு செய்தலில், மகேசுர பூசையும் அடங்கும். அதாவது அடியாருக்கு உணவு படைத்தல், ஏனை இன்றியமையாத தேவைகளை உதவுதல், அவர் சிறப்பியல்புகளை எங்கும் பரவச் செய்தல் முதலிய நற்றொண்டுகள் செய்தல். இதற்கு கணவனும், மனைவியும், குழந்தைகளும், சுற்றமுமாய் மக்கள் மனைவாழ்க்கை நிலையில் இருப்பது சிறப்பு. தொண்டுகட்கு ஒருவருக் கொருவர் துணையாய் இருந்து உதவ, அவ்வாழ்க்கையில் வாய்ப்புண்டு. அதனாலேதான், பரவையார் திருமணத்தைத் திருவாரூரில் நிகழுமாறு செய்தபின், நம்பியாரூரரை அடியார் திருக்கூட்டத்தில் இறைவன் தொடர்பு படுத்தினர்.

இதற்கேற்பவே, பெரிய புராணத்தில் வரும் நாயன்மார்களில் பெரும்பாலரும், எல்லா அடியார்களுக்கும் முதலாமவராக இறைவனார் அருள் வாக்குத் தந்து சிறப்பிக்கப் பெற்ற தில்லை வாழ் அந்தணரும், மனைவாழ்க்கையினராய் விளங்கிச் சிறந்தமை அறிதற்குரியது. அடியார்க்கு அடியராம் திறத்தை இனிது வளர்ப்பது மனையற வாழ்வு! நம்பியாரூரரின் தடுத்தாட்கொண்ட புராணம், இனிய பல நல்லுண்மைகளை உட்கொண்டு திகழ்கின்றது!

அருளறிவு தேடுவதுங் கூடுவதும்
'சிந்தையா னந்தமுடன் ஆடுவதும் தானறிவிலுள்.

மதிப்புரை

அற்புதத் தேவாரத் திரட்டு

தமிழ் மறை யெனப்படுஞ் சமய குரவர்கள் அருளிய தேவாரப் பதிகங்கள் யாவும், அற்புதப் பொன் மொழிகளே. ஒரு சமயம் சிவாலயமுனிவ ரென்பவர், அடங்கன்முறை முழுதும் தினமும் ஓத முயற்சித்தார். அது முடியாமற் போயிற்று. பிறகு அசரீரி எழுந்தது. அதையடுத்து பொதிகை சென்று தவம் புரிந்தார். அகத்திய பகவான் தோன்ற, அவர் வாயிலாக அகத்தியர் தேவாரத் திரட்டு எனப்படும் 25 பதிகங்களை மட்டும் தினமும் ஓதினால், அடங்கன் முறை முழுதும் ஓதிய பலனைப் பெறலாம் என்றறிந்த அவர், அவ்வாறு ஓதலானார். அப் பதிகங்களுள் சிலவும் இத்திரட்டில் தொகுக்கப்பட் டிருக்கின்றன.

வெளியிட்டோர்: கணபதி வாசகசாலை, காமாட்சி யம்மன் கோவில்தெரு, காஞ்சி. விலை அணா. 6. (சென்னை, அமிர்தவசனி காரியாலயத்திலும் கிடைக்கும.

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

23 ஆம் வைப

V. S. வேங்கடராமன்

மலர் 3, 318 ஆம் பக்கத் தொடர்ச்சி

பொல்லாதவர்க்கு வணக்கம் செய்வது நன் மக்கள் இயல்பு

பொல்லாதவர் அறிவிற் பெரியவர். அவரோடு ஒப்ப நிறுத்துப் பார்க்குங்கால் நல்லவர் அறிவிற் சிறியவர். "எள்ளா திருப்ப இழிஞர் போற்றற்கு உரியர்'' ஆதலின், பாம்புகளிட மிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அந்திநேரங்களில் எல்லாம் நம் மக்கள் அருங்கடன் இருக்கும்போது, (சந்தியாவந்தனஞ் செய்யும்போது) தோன்று

பாவியென்றே பேர்படைத்துப் பாழ்நரகில் வீழாமல்
ஆவிநின்ற சூத்திரத்தை யறிவதினி யெக்காலம்.

தொட்டுப் பாம்புகட்கு வேண்டுகோளை விடுப்பதாகிய ஒரு கடனை இன்றுங்கூடச் செய்து வருகிறார்கள்.

அதனோடு நம்மக்கள் ஒவ்வொரு மாதத்திலும் அமாவாசைதோறும் மரத்தினடியிலிருக்கும் பாம்புப் புற்றில் பாம்புகட்குப் பலி இடுவதும் வழக்கம்.

பொல்லாதவற்றிற்கு வணக்கம் செய்வது உயிர்களின் இயல்பு.

நம் மக்கள் பாம்புகட்குப் பலியிட, பாம்புகள் தம் பெரும் பகைவனும் பொல்லாதவனுமான கருடனுக்குத் தம் பங்குகளில் சிறிதளவு கப்பமாக உணவுப் பொருளைத் தந்துவந்தன. கருடன் பாம்பைத் தின்பவன்தானே. கருடன் அதனைப் பெற்றுப் பாம்புகளை மிகக் கொல்லாமல் விட்டு வந்தான்.

நெஞ்சில் கரவு உடையார் தம்மைக் கரப்பர்

மனத்தில் வஞ்சனை கொண்டவர் தம்மைத் தாங்களே மறைத்துக் கொள்ளத் தானே செய்வர். வேறுவழி அவர்க்கு.?

விஷ வீரிய மதம் பிடித்தவன் காளியன் என்ற பாம்பு அரசன். கத்ரூ என்ற நாகமாதாவின் செல்வப் புதல்வன், அக் காளியன், கருடனை அலட்சியம் பண்ணி, அந்த அமாவாசைப் பலியுணவு முழுதையுமே (தனக்குக் கிடைத்த மட்டும்) காளியன் உண்டுவந்தான்.

இறைவனிடம் தப்பலாம்
இறைவன் அடியாரிடம் தப்ப முடியாதே

சூரியனெதிர் நிற்கலாம். வெயிற்சூடு மிகப்பட்ட பொடி மணலில் நிற்க யாவர் இசைவார். கருடன் மிகக் கோபங்

பட்டுடை பொற்பணியும் பாவனையுந் தீவினையும்
விட்டுவிட் டுன்பாதம் விரும்புவது மெக்காலம்.

கொண்டு காளியனைத் தூக்கினான். காள விடப் பாம்பு கருடனை எங்கே கட்டும். காளிய நாகராஜன் கருடனின் இறக்கையால் அடிபட்டுத் தற்செயலாக எதிர்ப்பட்டதும், கருடன் வரமுடியாததும், கருடனிடமிருந்து தப்பிவாழும் இடமாக மற்றைப் பாம்புகள் அறியாததும், தனக்கு மட்டுமே தெரிந்ததும் ஆன அந்த யமுனையாற்றின் அருகே இருந்த மடுவில் நுழைந்தான். அக் காளியனது மனைவியர், எங்கெல்லாமோ தேடித் தம் ரமணீகத் தீவை விட்டுக் கருடனறியாமல் காளியனிடம் வந்து சேர்ந்தனர்.

ஆவாரை அழிப்பவர் யார்?

பக்கத்தார் பாராட்ட யாரும் பெருமையடைவர்

சிவன் சடையைப்போல் அந்த யமுனை மடு, சௌபரி என்ற முனிவர் கரையில் தவஞ் செய்யவே, அக் காளியப் பாம்புக்குப் பாதுகாப்பிடம் ஆயிற்று. ஒரு கருடவினம் சார்ந்த பறவை, அச் சௌபரி முனிவர் விரட்டவும் கூட அஞ்சாது அந்த யமுனைக்கரை மடுவில் வாழ்ந்த மீன்களைப் பலமாக விழுங்கிற்று. பார்த்தார் முனிவர். மீன்களிடத்துக் காதல்—கருடனிடத்துக் கோபம். தன் தவச் செல்வம் குறைகிறதே என்றும் பாராமல், கண்ணோட்டமே பெரிதாக மதித்து, "சத்தியம் என் மொழியைக் காக்க; இக் குளத்து மீன்களை, அத் திருமாலைச் சுமக்கும் கருடன் உட்பட எப்பறவை தின்றாலும் அது சாகவேண்டும்" என்று தன் இறைமொழி பலித்திடச் சபித்தார்.

அந்த யமுனைமடு மீன்கள், உள்ள ஆயுள் முழுதும் வாழக் கொடுத்து வைத்த போது, அவற்றைக் கொல்ல யாரால்தான் ஆகும்? அந்த சாபத்தைக் காளியன் அறிந்து

தண்டிகையுஞ் சாவடியுஞ் சாளிகையு மாளிகையும்
கண்டுகளிக்கும் கருத்தொழிவ தெக்காலம்.

தான், "கருடனிடம் இனி அஞ்சவேண்டாம்" என்று அந்த யமுனை மடுவில் முழுகி மறைந்திருந்தான். கண்ணனையும் எதிர்த்தான். குட்டும் பட்டான். பழைய பிறப்பிடமே சேர்ந்தான். காளியன் வாழ்ந்தான்.

நெருப்புக்குச் சுடும் ஆற்றலைத் தந்தவன் நெருப்பை விழுங்குவதும் வியப்பாமோ

சூரியனுக்கும் மேலான சூரியன் கண்ணன். நெருப்புக்கும் மேலான நெருப்பு கண்ணன். "எல்லாஞ் செய்யும் வல்லமை எனக்கே யுண்டு" என்பதைக் கண்குளிரத் தன்னடியார் கண்டு மகிழட்டுமே! எங்குங் காப்பவன் யானே என்பதை அறியட்டுமே என்று கண்ணன் திருவுளங் கொண்டான் போலும்.

முன்னே கண்ணனைத் தேடி அலைந்த அக்காளியன் வாழ்ந்த யமுனைமடுக் கரையில், அக்கண்ணனைக் கண்டது முதல், பாம்பின்படக் கீற்றுப்பட்ட பாதாம்புயத்தை மார்போ டணைத்தவரை, அந்தக் கோகுலக் குடியினர், பசியையோ தாகத்தையோ சிறிதும் எண்ணாது எண்ணி இருந்தனர். பலராமன் சிரிக்க, யசோதை கொஞ்ச, கண்ணன் பார்வையால் அமுதமே யாகிவிட்ட அந்தக் காளிய யமுனை மடுத் தண்ணீரை, யாவரும் அள்ளிப் பருகி அம் மடுவின் கரையிலேயே மருண்மாலையும் மயக்கிவிட்டதால், அந்நாள் இரவு முழுவதும் சிலர் ஆங்காங்கு உறங்கிக் கொண்டும், சிலர் காளிய மர்த்தன லீலைகளைக் கதையாகப் பேசிக் கொண்டும் இருந்தனர்.

பசுக்களும் காளைகளும் கன்றுகளும், அன்றிரவு அம் மடுவின் கரையிலேயே அசை போட்டுக்கொண்டு படுத்திருந்தன.

கோடைக்காலக் காட்டுத் தீ

நடு இரவு ஆயிற்று. இயற்கையை யார் தடுப்பர்? நான்கு பக்கங்களிலும் அந்த ஆயர்பாடியினரையும், ஆநிரையையும் காட்டுத் தீ கவிந்துக்கொண்டது. மூண்டெரிந்தது. தப்பி ஓட வழியில்லை, மாயக் கண்ணனைச் சரணம் அடைந்தனர். கண்ணா! எம்மைக் காத்தருள்க. தப்பி ஓட முடியாதபடி வளைத்துக் கொண்ட காலாக்கினியி னின்றும் எங்களைக் காப்பாற்றும்! நாங்கள் நமனுக்கும் அஞ்சாதவர். ஆனால் உமக்குத் திருவடித் தொண்டுபுரிய வாய்ப்பில்லாது போகுமே என்றுதான் அஞ்சுகின்றோம் என்று கதறினர்கள், நடுங்கினார்கள். **உன் திருவடிகளை விடோம் விடோம்** என்று ஓலமிட்டார்கள். கஜேந்திரனைக் காப்பாற்றக் கண்ணிமைப் பொழுதுந் தாமதியாது வந்தவன், எம் கண்ணன் அல்லவோ.

துடிப்பார் அல்லல் முழுதும் தொலைத்திட, தொலையா விரதம் பூண்ட, கண்ணன் துயிலாதவன் அல்லவோ. அனந்த சக்திகளைக் கொண்ட அவ் வனந்த கிருஷ்ணன், தன்னடியார் தவிப்பது கண்டு மனந்தாளாது, தன் வாயால் அந்நெருப்பை விழுங்கினர். நெருப்பைச் சுடத்தான் அக் கண்ணன் விழுங்கினனே? தன்னடியாரைச் சுட வைத்து விட்ட குற்றத்திற்குத் தன் வாயை அத் தீயாற் சுட்டுக் கொண்டனனே! தான் யகா வைசுவாநரன் என்பதைக் காட்ட அவ்வாறு செய்தனனே! வெளியி லிருக்குங் காற்றை எல்லாம் இழுத்துத் தீயையும் இழுத்து அணைத்து இமைப்போதில் தன்னடியார்க்கு உயிர் நல்கினனே! யாதோ அறியோம் என்று நினைத்துக்கொண்டார்கள் அவ் ஆயர்.

மறுநாள் பொழுது புலர் வேளையில் ஆயர்பின் தொடர, ஆ நிரையும் சூழ்ந்துவர, ஆயர்பாடியுள் கண்ணன் பலராமனுடன் நுழைந்தார்.

" அன்புஅலரால் பொருளனை;
அப்பனும் அணிந்திருக்கே "

(தொடரும்)

COSMOS AND TREES

Creation lies in the reflection of God. If there be a mirror and a man stands in front of it, the reflection inside the mirror is not the same as the original. The right side becomes the left and vice versa. Even so, if man could reverse his outlook and qualities, he becomes divine. Let us see how. If his covetousness and greed be transformed into love and philanthropy, if his selfishness becomes selflessness, if his exclusiveness as the "I" in him becomes an all world inclusiveness of universal love, the man so reversed in all his short-comings, becomes divine.

There is an asvatha tree whose roots are implanted in Heaven above and whose trunk, branches, leaves and buds and fruits project downwards. The Heavenly tree grows earthwards to shower its blessings on the lives on earth. Of such a tree rooted in heaven, indestructibly fixed in the identity with God-head, expressing itself in terms of Vedic sounds which constitute its leaves, blossoming to radiate the sweet smell of Gnana and dropping its fruits of Mukthi or Liberation, to those who care to take them, the Bhagavad Geetha describes as the indestructible Purusha. It is Narayana himself who manifests as the Arasa tree the king tree of all vegetation and life. This

tree, is the object of worship of the learned "Vedaviths." Off and on you can see devotees rounding the tree 108 times to sense the grace of Sri Narayana.

There is yet another tree known by the same name, striking its roots in the separatism of the earthly life, whose trunk is built of appropriations of gross matter, whose leaves are but the arms of clutching greed, whose branches happen to be the wicked arms of Ahankara, in its association with Asa, pasa, Kama, krodha, Loba, Moha, Madha, Mathsaryas, the eight enemies or asuras who infect the human mind, whose flower emits nauseous smell of distemper and dislike and whose fruit contains the poison of death. This is the tree of Samsara. It is of this tree that the Lord said "Sabre it down with the sceptre of non-attachment." This tree does not exist except in the reflection of the waters of Samsara. Man must take care to discriminate between the two apparently similar trees of Asvatha. The first described is the Tree of Knowledge, the Tree of Life, the Tree of Moksha or deliverance-the real everlasting Tree of Gnana. This grows in an atmosphere of divine qualities. The second is to be found in the city of hate and it is the tree of deadly poison, being a mere reflection in the dirty waters of samsara of death. Sages worshiped the first and destroyed the second. The growth of the first accords with the divine will even as the destruction of the second is predestined.

This you find cryptically elucidated in the 15th Chapter of Gita, in the discourse on the manifestation of the Lord Supreme as providing the living shade for the struggling humanity who seek to experience the joy of His Union.

—*Thiruppugal Mani.*

நன்கொடைக் குகந்த
பலவர்ணப் படங்கள்

குமரகுருபரன்	1—4—0
சைவசமய நால்வர்	1—0—0

நஞ்சன்கூடு
சத்வைத்தியசாலையின்
அற்புத மருந்துகள்.
வாத நோய்களுக்கு சிறந்த சிகிச்சை.
(பாரிச வாயு, கீல் வாயு, முட்டிப்பிடிப்பு)
வியாதி விபரம் எழுதுக
குழந்தைகளுக்கும், மாதர்களுக்கும்
சிறந்த மருந்துகள்.

நஞ்சன்கூடு-பல்பொடி
பாக்டெரியின்
சிறந்த மருந்துகளை உபயோகியுங்கள்
காஷ்மீர்-குஸும்
கூந்தல் செழிப்படைய.
ஸான்டலக்ஸ்
தீப்புண், சொறி, சிரங்கு, காயங்களுக்கு
ப்ரேமலீலா
சிறந்த மைசூர் ஊதுவத்திகள்
லிமிடெட் கன்ஸர்ன், 53, பந்தர் தெரு, சென்னை.

உலக்குண் டாகும் புவியிடை
எனக்குண் டாகும் பணிவிடை
கணக்குண் டாதல் திருவுளம்
அறியாதோ.

(ஸ்ரீ அருணகிரிநாதர்)

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S IYER LIBRARY
BESANT NAGAR :: MADRAS-90

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

104

ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்
நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திரவாதமுமான
சரக்குகள்.

ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்கு ஒர்க்ஸ்
புரொப்ரைட்டர் :
சி. ஞானசுந்தர நாயகர்
341, எஸ்பிளனேட், சென்னை—1.
ஷோ ரூம் : 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தர செட்டியார் & Co.,
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124. தெற்காவணி மூல வீதி - மதுரை.
Tel :—"FAITH' Estd :—1921 Phone :—113

வியாபாரக்குறி
N. K. M.
தங்கநாடா



நம் நாட்டுத் தொழில்களில்
சிறப்புவாய்ந்த கைத்தறியால்
சிறந்த நூதன முறைகளில்
தயாரிக்கப்பட்ட
பட்டு. நூல் ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்.

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
மொத்தம் அண்டு சில்லரை வியாபாரம்,
53. கிடங்குத் தெரு, மதராஸ் 1.

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami 54, Bunder St. Madras.